விலை சதம் 50

★ ★

பக்கங்கள்— 10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவிட்ஸ், றிக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோ ஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

# ஈழநாடு வார மலர்

# *THE EELA NADU VARAMALAR*

ஆரோக்கியமான வாழ்விற்கு

மில்க்வைற் மெடிக்கேட்டட் சோப்

வாங்கி உபயோகியுங்கள் கைக்கடக்கமான 50 சதம் அரைக்கட்டியும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

—ஓர் மில்க்வைற் தயாரிப்பு

மலர் 19 | ஆடி 2 | றஜப் 29 | ஞாயிற்றுக்கிழமை | [17—7—77] | இதழ் 156

# ஆட்சிப் பொறுப்பில் அமர்பவர் யார்?

## தேர்தலுக்கு 4 தினங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொதுத் தேர்தலுக்கு இன்னும் நான்கு தினங்களே இருக்கின்றன. எந்தக் கட்சி ஆட்சிக்கு வரும் என்ற பேச்சு இப்போதே மக்கள் மத்தியில் எழுந்துள்ள போதிலும், சமீபத்தில் இந்தியாவில் ஆட்சிமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் வட இந்தியாவில் ஜனதா அலை வீசியது போல் இப்போது தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி அலையும் தென்னிந்தியாவில் காங்கிரஸ்-எம். ஜி. ஆர். அலை வீசியது போல் வடக்கு கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி அலையும் வீசுவதாகவும் பொதுவாகக் கருதப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சி அமைக்கும் என்று திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியே மீண்டும் ஆட்சிக்கு வரும் என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் நம்பிக்கையுடன் பிரசாரக் கூட்டங்களில் கூறிவருகின்றனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதிலும் ஆட்சி பீடத்துக்கு வருவதற்குப் போட்டியிடும் பெரும்பான்மைக் கட்சிகள் அக்கறை செலுத்துகின்றன.

தமிழாராய்ச்சி மாநாட்டில் மாண்டவர்கள், புத்தளத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் சம்பந்தமாக பகிரங்க விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படுமென்று ஐக்கிய தேசியக் கட்சி உப தலைவர் திரு ஆர். பிரேமதாசா தெரிவித்திருப்பது இதற்கொரு சான்றாகக் கருதப்படுகிறது.

இலங்கையிலுள்ள வசதி படைத்த பெரும் பத்திரிகைகள் ஒவ்வொரு தடவையும் போல், மறைமுகமாக, ஆட்சி பீடத்தில் தமது விருப்பத்துக்கேற்ப மாற்றம் செய்வதற்கான முயற்சிகளை இம்முறையும் மேற்கொண்டிருப்பதாகவும் மக்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

இதேசமயம், பொதுவாக இடதுசாரி மனப்பான்மை கொண்ட நடுநிலைமை அரசியல் வாரப்பத்திரிகையான 'ட்ரிபியூன்' என்ற சஞ்சிகை இந்தத் தேர்தலில் தனிக்கட்சி என்ற முறையில் ஐக்கிய தேசியக் கட்சி என்பது—எண்

[10ம் பக்கம் பார்க்க[

## ரிவால்வர் முனையில் கொள்ளை

அம்பாறை, சனி

அம்பாறைப் பகுதியில் பல இடங்களில் ரிவால்வரைக் காட்டிக் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவங்கள் பல இடம் பெற்றுள்ளன. இத்துப்பாக்கிகள் பெருமளவு உள்ளூர் உற்பத்திகளாகவே உள்ளனவாம்.

14-ம் திகதி அம்பாறைப் பொலிசைச் சேர்ந்த வீரசூரியாவிற்குக் கிடைத்த தகவலை அடுத்து அம்பாறை கெமனுபுர என்ற இடத்தைச் சேர்ந்த அபயசேகராவைக் கைது செய்தபோது அவரிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கி எடுக்கப்பட்டுள்ளது. இக் கைத்துப்பாக்கி வெளிநாட்டைச் சேர்ந்ததாகவும், அத்துப்பாக்கியில் 'கலிரா' என்று பொறிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. அப்பாக்கி யாருடையது என்பதை அறிவதில் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர்.

## விடிவதற்கு முன் அதிகமான முடிவுகள்

### —தேர்தல் ஆணையாளர்

கொழும்பு, சனி

21-ம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலின் பெரும்பாலான முடிவுகள் 22-ம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலைக்கு முன்னர் வெளியாகிவிடும் என்று தேர்தல் ஆணையாளர் திரு. ஈ. எஸ். டயஸ் அபயசிங்கா இன்று விடுத்த அறிக்கையொன்றில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

"வாக்காளர்கள் தங்கள் கடமையைச் சரிவரச்செய்து, பொறுமையுடன் நடந்து கொள்வதன் மூலம், பொலிசாருக்கும் தேர்தல் அதிகாரிகளுக்கும் போதிய ஒத்துழைப்பு அளிக்க முடியுமென்றும் மக்கள் கூட்டம் கூட்டமாக வீதிகளிலும் பொது இடங்களிலும் நிற்காமல் வீடுகளில் இருந்து வானொலி மூலம் தேர்தல் முடிவுகளை அறிந்துகொள்வது சிறப்பாக இருக்குமென்றும் தேர்தல் ஆணையாளர் வாக்காளப் பெருமக்களைக் கேட்டுள்ளார்.

## ஆடித் திருவிழா

[கே. பி எச்.]

இப்போது ஆடிப்பூர திருவிழா பல ஆலயங்களிலும் நடைபெறுகிறது. இது பத்து நாள் விழா. பெண்மையைப் போற்றும் இந்த உற்சவத்தில் சிவபெருமானுக்கு இடமில்லை. சக்திக்கு மட்டுமே தனி இடம்.

பூத வாகனம், அன்னம், யானை, இடபவாகனத்துடன் சப்பரம், புஷ்பப் பல்லக்கு, நாகம், குதிரை, தேர் முதலியவற்றில் அம்மன் சர்வலங்கார பூஷிதையாக பத்து நாளும் அழகாக கம்பீரமாகப் பவனி வரும் கண்கொள்ளாக் காட்சி, பெண்மையைச் சைவம் எப்படிப் பெருமைப்படுத்துகின்றதென்பதற்கு அத்தாட்சி.

பெண்கள் பெருமையுடன் வாழ்ந்தால்தான் ஒரு சமூகமும் நாடும் சிறப்புற்று வாழும். சமூகத்தில் சரி பாதியான பெண்கள், ஆண்களைப்போல் சரி நிகர் சமானமென்பதைக் குறிப்பதே 'அர்த்தநாரீஸ்வரர்' (பாதி ஆண், பாதி பெண்) என்ற அபூர்வமான முகூர்த்தம்.

ஆனால் இன்று பெண்களுக்கு சீதனம் முதலிய சிறுமைகளும், சமூகச் சங்கடங்களும் கொஞ்சமல்ல ஒரு குடும்பத்தில் பெண் பிறந்ததும் 'பெண்ணா' என்று கவலைப்படுவது சர்வ சதாரணம். ஏன்? அபலைகளான பெண்களின் கவலைக்குரிய வாழ்க்கையைக் கருதித்தான். அதிர்ஷடமுள்ள பெண்கள் சிலருண்டு. ஆனால் அபூர்வம்.

அவர்களது இன்னல்களை சட்டபூர்வமாகத் தீர்த்துக்கொள்ள, பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. நாட்டை ஆட்சி செய்வதற்கான வாய்ப்பும் ஆண்களைப் போல் அவர்களுக்கும் சம உரிமை இதனால் அளிக்கப்பெற்றுள்ளது. ஈழத்தில் தமிழ்பெண்கள் அவ்வித நிலையை இன்னும் அடையவில்லை என்பது உண்மையே. இது அவர்களின் குறைதான். தமிழ் சமூகத்திலுள்ள படித்த பெண்கள், நாட்டிலும் சமூகத்திலும் தங்களுக்குள்ள கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து தங்களுக்குள்ள வாக்குரிமையை சரிவரப் பயன்படுத்தினால், அவர்களது மதிப்பு உயர்வதுடன், அவர்களது இன்னல்களும் தீர வழி பிறக்கும்.

வருகிற வாரம் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது இந்த வாய்ப்பை சிறப்பாகப் பெண்கள் நன்கு பயன்படுத்தவேண்டும். தங்களது சமூக, பொருளாதார சங்கடங்களைத் தீர்க்கவும், ஆட்சியிலே தங்களுக்குரிய பங்கை அளித்து உதவக்கூடியவர்களையே ஆதரிக்கவும் இத் தேர்தலில் முன்வந்தால் அவர்களது விமோசனத்துக்கான நாள் நெருங்கி விடும்.

இதற்கு அவர்கள் செய்ய வேண்டிய ஒரே ஒரு முயற்சி அவர்களது பொன்னான வாக்குரிமையை வீணாக்காமல் அன்று வீட்டிலேயே சோம்பி இருந்துவிடாமல் வாக்குரிமையுள்ள எல்லாத் தமிழ்த் பெண்களும் தயவு செய்து வாக்குச் சாவடிக்குச் சென்று, தங்களது நம்பிக்கைக்குரிய வேட்பாளருக்கு வாக்குச்செய்யவேண்டும். தங்கள் நலன்களைக் காப்பதற்கு மட்டுமன்றி சமூக நலனையும், நாட்டின் நலனையும் காக்க, இது அவர்களது கடமையும் பொறுப்புமாகும். ஆடி மாதத்தில் நடக்கும் தேர்தல் திருவிழா நம் பெண்களுக்கு அறிவுறுத்தும் செய்தி இதுவேயாகும்.

# வேலை நிறுத்தம் பரவுமா?

## சமரச மகாநாட்டில் ஒரு நாள் அவகாசம்

]புலோலி நிருபர்]

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடைபெற்றுவரும் பருத்தித்துறை இ. போ. ச. ஊழியர்களின் வேலைநிறுத்தம் நாளை திங்கட்கிழமை தீர்க்கப்படாவிட்டால், வேறு சில டிப்போக்களுக்கும் பரவலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பருத்தித்துறை இ. போ. ச. ஊழியர்களின் வேலை நிறுத்தம் சம்பந்தமாக சமரச மாநாடொன்று நேற்று பருத்தித் துறையில் நடைபெற்றது.

இப் பேச்சுவார்த்தைகளில் யாழ். அரசாங்க அதிபர் திரு. ஏ. ஶ்ரீலால் விஜயபாலா. காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் அதிபர், யாழ். உதவிப் பொலிஸ் அதிபர். இ. போ.ச. வடபிரதேச பொறியியலாளர் திரு. கே நாகரட்ணம் திரு. பி. யு. மகாலிங்கம் ஆகியோரும் ஊழியர்கள் சார்பில் நான்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தச் சமரச மாநாட்டில் 'சப்பல்' பஸ்களை பஸ் ஊழியர்கள் தொடவேமாட்டார்கள் என்பதைத் தொழிற்சங்கப் பிரதநிதிகள் அழுத்தமாகக் கூறியதைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்யும் பஸ் சாரதிகளுக்கும் கண்டக்டர்களுக்கும் ஒரு நாள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

'சப்பல்' பஸ்களுக்குப் பதிலாக இங்குள்ள 34 'அசோக் லேயிலண்ட்' பஸ்களைத் தருமாறு ஊழியர்கள் சார்பில் வற்புறுத்தப்பட்டது.

பஸ் ஊழியர்களின் கோரிக்கைகளுக்குப்பதிலளித்த யாழ்.

(10-ம் பக்கம் பார்க்க)

## 'ஈழநாடு' தேர்தல் போட்டி முடிவு திகதி 20-7-77

உங்கள் கூப்பன்களை உடனடியாக அனுப்பி வையுங்கள்!

விண்ணப்பப்படிவம் உள்பக்கத்தில்

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

### தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளி லும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப் பிடுக:-

| தொ.இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79 | ஊர்காவற்றுறை | .................... |
| 80. | வட்டுக்கோட்டை | .................... |
| 81. | காங்கேசன்துறை | .................... |
| 82. | மானிப்பாய் | .................... |
| 83. | கோப்பாய் | .................... |
| 84. | உடுப்பிட்டி | .................... |
| 85. | பருத்தித்துறை | .................... |
| 86. | சாவகச்சேரி | .................... |
| 87. | நல்லூர் | .................... |
| 88 | யாழ்ப்பாணம் | .................... |
| 89. | கிளிநொச்சி | .................... |
| 90. | மன்னர் | .................... |
| 91. | முல்லைத்தீவு | .................... |
| 92. | வவுனியா | .................... |
| 94. | திருகோணமலை | .................... |
| 95. | மூதூர் | .................... |
| 96 | கல்குடா | .................... |
| 97. | மட்டக்களப்பு (1) | .................... |
| | (2) | .................... |
| 98. | பட்டிருப்பு | .................... |
| 100. | சம்மாந்துறை | .................... |
| 101. | கல்முனை | .................... |
| 102. | பொத்துவில் (1) | .................... |
| | (2) | .................... |
| 103. | புத்தளம் | .................... |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ............ | ................ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ............ | ................ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ............ | ................ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப் பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 84. | உடுப்பிட்டி | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 85. | பருத்தித்துறை | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 97. | மட்டக்களப்பு | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ........... ரூபா ........... இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியி டப்படும் "ஈழநாடு தேர்தல்-77போட்டி" நிபந்தனைக ளுக்கும் அதன்நடுவர் குழு''வின் தீர்மானத்துக்கும்கட்டுப் படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ...............

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காள ருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக் கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையேஇப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக் குகள் = அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றாவ தாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும். போட்டி முடிவுதிகதி 20-7-1977

குருமாற்றம்: சோதிடர் கூறுகிறார்

# தமிழருக்கு முன்னேற்றம்: தங்கம் விலை குறையும்

குருபகவான் இம்மாதம் 17-ந் திகதி இரவு 11-30 மணிக்கு வளர்ச்சி, ஆக்கம், விரிவு, விளைச்சல், முன்னேற் றம் முதலியவற்றைக் கொடுக் கும் மிதுனராசிக்கு இடம் பெயருகிறார்.

இச் சிறப்பான மாற்றத் தினால் உலகத்தில் பலவித மான முன்னேற்றம், ஆக்கம், சமாதானம், விரிவு, சந்தோ ஷம், நல்லுறவு முதலியன காணப்படும். விளைவு பெரு கும். பஞ்சம் ஒழியும். மழை பெய்யும். வேதங்கள் சிறப் பாக ஓதப்படும். பல்கலைக் கழகங்களில், நீதிபரிபாலனங் களில் முன்னேற்றங்களுண் டாகும். பத்திரிகைச்சுதந் திரம் ஆக்கம் விரிவுண்டா கும். பத்திரிகைகளின் விலை கள் குறையும். உணவுப் பொருள் மலியும். பவுண் விலை இறங்கும். யுத்தபீதி உண்டாகாது. பெருவிழாக் கள் நடைபெறும்.

ஐக்கிய அமெரிக்கா, கனடா, ருசியா, ஜேர்மனி, இந்தியா, இலங்கை, லண்டன், அவுஸ் திரேலியா எகிப்து முதலிய நாடுகளில் முன்னேற்றங்கள் மிகச் சிறப்பாக இருக்கும். இலங்கைத் தமிழர்கட்கு சிறப் பான முன்னேற்றங்கள் கொடுக்கும்.

பண்டிதர்

கே. என். நவரத்தினம்

1973-ம் ஆண்டு யூன் மாதம் 30-ம்தேதி ஏற்பட்ட சூரியகிரகணத்தினால் பல் வேறு நாடுகளிலும் ஏற்பட்ட சீர்குலைவுகள், விலைவாசி உயர் வுகள், உறவுப் பங்கங்கள் யாவும் ஒரு சிறப்பான நல் வழிக்கு கொண்டுவரப்படும். இம் மாற்றம் பல வருடங் ளுக்கு இவ்வுலகில் நன்மை செய்ய உதவும்.

மிதுனராசி வளர்ச்சி அறிவு, புத்திக்கூர்மை, கல்வி, விளைவு, தோழமை, சகோதரத்துவம், முன்னேற்றம், அச்சுக்கூடம், பத்திரிகைகள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், கலைகள் முதலிய வற்றைக் குறிக்கும் ராசி தேவகுருவாகிய வியாழபக வான் மிதுனராசியில் சஞ்சரிக் கும்காலத்தில் தெய்விககடாட் சத்தினால் இவ்வுலகின்கண்ணே தோன்றுநிற்கும் கஷ்டங்கள் விலைவாசி உயர்வுகள், அமைதி யின்மைகள் ஒழுங்குக்குக் கொண்டுவரப்பட்டு சீர்பெருகி செல்வம் கொழிக்கச்செய்யும்.

இனித் தனிப்பட்டவர்கட்கு குருமாற்றம் தரும் பலாபலன் களாவன. கீழே கொடுக்கப் பட்ட பலன் சூரிய ராசிக்கே தரப்பட்டுள்ளது.

### மேடம்

கல்வியால் முன்னேற்றம். பிரயாணத்தில் வெற்றி. சகோ தரங்களுடனும், அயலவருட னும் நலுல்றவு மனச்சந் தோஷம். பொருள் வரவு சந் தோஷம்வரும் நினைத்த கருமம் முன்னேறும்.

### இடபம்

குடும்பச் சிறப்பு, செல்வப் பெருக்கு, வளர்ச்சி, உயர்வு, கல்விச் சிறப்புண்டாகும். வங்கி நிலை சீர்பெறும். கடவுள் கடாட்சம் உண்டு. ஆரோக்கி யம் சிறக்கும்.

### மிதுனம்

மிகவும் அதிட்டம் தரும். வெற்றி கொடுக்கும். ஆரோக் கியம், தைரியம் உண்டாகும். கடவுள் அருள் கிட்டும். எண் ணிய எண்ணமெல்லாம் கை கூடும். பிரயாணம், உறவு கொண்டாட்டங்கள் மிகும். செல்வப்பெருக்கு உண்டாகும். மிக நல்ல மாற்றம்.

### கடகம்

பொருள் அழிவு, அவமானம், அபகீர்த்தி, நஷ்டம், கஷ்டம் தரும். மனக்கவலை தரும். சூழச்சி, கபடம், வெறுப்பு முதலியவற்றால் கஷ்டப்பட நேரும்.

[9-ம் பக்கம் பார்க்க]


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை ''மூர்க்கத் தடி'' எனக்கூறப்படும் கடற் கரை பிரதான வீதியில் மின் சாரம், குழாய்நீர் வசதிகளு டன் காணிப்பரப்பு 32 லாச் சம் கொண்ட பல அறைகள் அடங்கிய பெரியவீடும், தென் னந்தோட்டமும் உள்ளவளவு பற்றிய விபரம் வேண்டியோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். மாகாணத் தலைவி, மாகாண இல்லம், தபாற்பெட்டி இல. 65, தி. சு. கன்னியர் மடம், யாழ்ப்பாணம். 6654

சங்கத்தாவயல், இயக்கச்சி யில் 6 பிரிவுகளாக மொத்தம் 63 ஏக்கர் தென்னந் தோட் டம் விற்பனைக்குண்டு. விபரங் களுக்கு: சு. குமாரசாமி, அப்பையா ஓவசியர் கமம், 5-ம் வாய்க்கால், பரந்தன். 6611

நல்லநிலையிலுள்ள EN-1000 தொடர் இலக்க ஒஸ்ரின் கேம் பிறிஸ் (A 50 Standered Size Engine) விற்பனைக்குண்டு. K. நித்தியானந்தன், 33, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 6672

### தேவை

வெல்டிங், கம்மாலை வேலை, லேத் வேலை தெரிந்தவர்கள் தேவை. எழுதிய விண்ணப்பத் துடன் நேரில் வரவும். ராதா மெஷின் கொம்பனி, 95 ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6674

### தேவை

அனுபவம் வாய்ந்த நெச வாளர் தேவை. ஆண்களும் பெண்களும் அத்துடன்நெசவு. ஆசிரியரும் தேவை. வேலைக் குத் தகுந்த சம்பளம் வழங் கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி, மணியம்ஸ் ரெக்ஸ்ரையில்ஸ், 16, மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம். 6667

சித்திரை, அலுமினியம், சீனச்சட்டி வார்ப்பு வேலை தெரிந்தவர்கள் தேவை நேரடி யாக வரவும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6675

### கல்வி

சிற்றி அன் கில்ட்ஸ் (City and Guilds Part I, II, III), சாட்டட் எஞ்சினியரிங் (C. E. I. Part I), எக்கவுண் டன்சி (I C.M.A.) சட்டம். A. L. வகுப்புக்களும் நடை பெறும். இஞ்சினியரிங் அன் எக்கவுண்டன் கல்லூரி, மூட் டாசுக்கடை சந்தி, No. 355, கே. கே. எஸ். றேட், யாழ்ப் பாணம். கிளை: ஒக்ஸ்போர்ட் கல்லூரி, கொக்குவில். 6671

### ஜோதிடம்

அற்புத வருங்காலப் பலன் கள் தமிழ், ஆங்கிலத்தில் தொடர்புகொள்ளவும். நீலா, முருகையா, ஜோதிட ஆராய்ச்சி நிலையம், 'முருகன் இறை' கே. கே. எஸ். வீதி, மல்லாகம் 6668

### பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளி லும் கப்பல்களிலும் வேலைகள் பெற ஏற்ற பயிற்சிகள், கல்வி அமைச்சினால் தொழிற்பயிற்சி நிலையமென அங்கீகாரம் பெற்ற இலங்கையின் ஒரே பயிற்சிநிலையம். NIET, வெல் டிங் (Electric and Gas இலெக் றிக் வயரிங், றேடியோ (Transistor) Motor Mech--anism, City and Guilds (Electrical) P.M.G. (Special) Certificate பகல் - இரவு வகுப் புகள். National Institutes, மைற் மண்டபம், 128, பருத் தித்துறை வீதி, யாழ்ப் பாணம். 6610

## நல்லூர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

### பாற்பண்ணைத்திட்டம்

மேற்படி பாற்பண்ணையில் இதுவரை முகாமையாள ராகக் கடமையாற்றிய திரு. மு. இராஜமனோகரன் 15-07-1977-ல் இருந்து பாற்பண்ணையில் உள்ள தனது சகல பொறுப்புக்களிலிருந்தும் விலகிக்கொண் டுள்ளார். எனவே 15-07-1977-ன் பின்பு சங்கத்தின் பொருட்டு அவரால் செய்யப்படும் எவ்வித கொடுக் கல், வாங்கல், மற்றும் நடவடிக்கைகளுக்கு எமது சங்கம் பொறுப்பேற்கமாட்டாதென்பதை இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

பொதுமுகாமையாளர்

நல்லூர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
பாற்பண்ணைத்திட்டம்,
62, வைமன் வீதி, யாழ்ப்பாணம்
6670

# மண்ணின் மாண்பு!

கணபதி கணேசன்

மார்கழிகாலத்தின் இறுதிப்பகுதி அது! வெளியே பனி கொட்டிக் கொண்டிருந்தது. ஆனால் பகலில் நிலம்வெடிப்பது போன்று வெப்பம் தகிக்கும். அதற்கேற்றவாறே இரவில் பனியும் கொட்டிக்கொண்டிருக்கும். இச் சூழ்நிலையில் அதிகம் குளிரைத் தாங்க முடியாத இளங்கோ போர்த்திக்கொள்ள ஒரு போர்வை இல்லாமல், நித்திரை வராமல் பாயில் புரண்டு புரண்டு சிணுங்கிக்கொண்டிருந் தான்.

ஆனால் அவன் தாய் தங்கம்மாளோ முழங்கால்களிடையே முகத்தைப் புதைத்தவாறே குறண்டிப் படுத்திருந்தாள். குளிர் அவளுக்குப் பழக்கமானதே! நடுங்கும் குளிரிலும், பனியிலும் நனைந்து பழக்கப் பட்டவள்தான் அவள். இளங்கோவின் முனகல் சத்தம் கேட்டுக் கண்விழித்த தங்கம்மாள், பாயின் கீழே விரித்திருந்த சாக்குத்துணியை எடுத்து அவனைப் போர்த்துவிட்டாள். குளிருக்காக அவளிடம் இருந்த பொருளும் போய்விட்டது. இனிமேல் அவளுக்கெங்கே நித்திரை வரப்போகின்றது!

தங்கம்மாள் தூங்கிய இரவுகளை விடத் தூங்காத இரவுகளே அதிகம். தனது வாழ்வை எண்ணி அவள் கண்ணீர் வடிக்காத இரவுகள் மிகவும் குறைவு. அழுகை! கண்ணீர்!! இதுதான் அவளது நாளாந்த வாழ்க்கை!

பகல் முழுவதும் சிந்தனை! இரவு முழுவதும் அழுகை!! தனது கண்ணீரை மகன் கண்டுவிடுவான் என்றஞ்சியவள் மகன் தூங்கியபின்பு எழுந்திருந்து எத்தனை நாட்கள் அழுதிருக்கின்றாள்?!

பத்து வயதுக்கு மேலாகிவிட்ட இளங்கோவுக்கு அந்த வருடம் பள்ளிக்கூடத்தில் சித்தி எய்தியபின், இரண்டு மூன்று மாதங்கள் வரை; எந்தவித புத்தகங்கள் வாங்காத காரணத்தினாலும், பள்ளிக்கூடத் தவணைப்பணம் கட்டாததினாலும்; "பள்ளிக்கூடத்தில் "தண்டனை" என்ற பெயரில், வாங்கின் மேல் கால் கடுக்க ஏறி நிற்பதிலும் பார்க்கப் பள்ளிக்கூடம் போகாமல் நிற்பது எவ்வளவோ மேல்" என்ற பெரிய மனிதர் பேசும் வேதாந்தம் போல் தாயாரிடம் பேசிவிட்டு வீட்டிலேயே நின்றுவிட்டான் இளங்கோ?

அவனைக் கண்டித்துப் பள்ளிக்கூடம் அனுப்ப அந்த வீட்டில் யாருமே இல்லை. அப்படியே அவள் சில சமயங்களில் அதைப்பற்றிப் பேச வாயெடுத்தாலும் - அவன் கேட்பதையெல்லாம் தன்னால் வாங்கிக்கொடுக்க முடியாது என்ற காரணத்தினால்— பேசாமல் இருந்துவிடுவாள். மகனைப் படிக்க வைக்க அவள் காட்டிய தீவிரத்தின் அளவு -அநேக நாட்கள் பட்டினி கிடந்து, அன்றாடம் அதற்கெனச் செலவிடும் பணத்தை எடுத்து இளங்கோவின் பள்ளிக்கூடச்செலவுக்கெனச் செலவிடக் காத்திருந்தும்— இளங்கோ படிப்பில் தீவிரம் காட்டவில்லை.

மகன் படிக்காதபோதிலுங்கூட அவனை உதவாக்கரையாக- சோம்பேறியாகவளர்க்கவில்லை அவள். உணவுடன் அன்பெனும் அமுதை ஊட்டினாள். சிறுவயதில் பாலுடன் பண்பையும் சேர்த்துப் பருக்கினாள் போலும். அதனால்தான் அவன் இத்தகைய பண்புள்ளவனாக வளரமுடிந்தது. ஆனால் வறுமையின் கோரப் பிடியில் சிக்கியிருந்த தங்கம்மாளால் இளங்கோவைச் செல்வச் சிறப்பாக வளர்க்க முடியவில்லை.

தன் மகனை வறுமைப்பிடியில் இருந்து மீட்டு, அவனை ஒரு மனிதனாக, இந்த நாட்டின் நல்லதொரு பிரஜையாக எப்படி வளர்க்கப்போகிறாள்? இதை எண்ணித்தான் அவள் இரவிரவாக அழுதுகொண்டிருக்கின்றாள்.

காலம் அவளுடைய கண்ணீருக்குப் பதில் சொல்லுமா? நிச்சயம் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

புராதனகாலத்திலிருந்து இந்த உலகம் பெண்களின் கண்ணீருக்கு மதிப்பளித்து வந்திருக்கின்றது! ஆனால் இன்று காலம் எவ்வளவோ மாறிவிட்டது. "கண்ணகி அன்று கோவலன் மாதவியை நாடிப் போன போதிலும்; அவன் நினைவாகவே வாழ்ந்தாள். நளாயினி கணவனின் உயிருக்காக யமனுடன் போராடினாள்"- இன்று இத்தகைய பெண்களைக் காண்பதே அபூர்வம்!

இத்தனைக்கும் தங்கம்மா விதவையோ அல்லது அனாதையோ அல்ல! கட்டிய கணவன் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டுதானிருக்கின்றான். அவளது சோகவரலாறு கேட்போர் இதயத்தில் இரத்தத்தைக் கசியவைக்கும். அவளது கடந்தகாலம் கண்ணீரால் எழுதப்பெற்ற ஒரு காவியம்.

நித்திரையில் சிணுங்கிக்கொண்டிருக்கும் மகனைப் பார்க்கின்றாள் அவள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடுகின்றது. ஆதரவுடன் மகன் அருகில் அமர்ந்து அவள் முகத்தைத் தடவிவிடுகின்றாள்.

திருமணம் ஆகுமுன்னர் அவள் எப்படி வாழ்ந்தாள்! இன்று எப்படி இருக்கின்றாள்? அதை எண்ணும் பொழுதே அவள் கண்கள் கண்ணீரை உகுக்கின்றன.

●

அந்தக்காலத்தில் தங்கம்மாவைப் போல் பணமும், அழகும் படைத்தவர்களைக் காண்பது அரிது. செல்வத்தின் செழிப்பில் சுந்தரவல்லியாகத் திகழ்ந்தாள் அவள். அவளுக்குத் திருமண வயது வந்த பொழுது 'விவசாயத்தில் அசையாத நம்பிக்கை கொண்ட அவளுடைய பெற்றோர், சொந்த நிலபுலன்களுடன் விவசாயம் செய்யும் சுப்பையரை அவளுக்குத் திருமணம் செய்துவைத்தனர்.

ஆரம்பத்தில் அவள் வாழ்வு அமைதியான கடலில் செல்லும் ஓடம்போல்தான் இருந்தது, கடந்த ஒரு வருடம் வரை! அதன்பின்தான் அவள் வாழ்வில் கோரப்புயல் வீசியது. குடும்பப்படகோ திசையறியாது சிக்கித் தவித்தது.

அந்த வருடத்தில் அரசாங்கத்தால் வன்னிப்பகுதியில் கொடுக்கப்பட்ட காணிக்குச் சுப்பையரும் விண்ணப்பம் செய்திருந்தார். பங்கு போடப்பட்ட முதற்துண்டே சுப்பையருக்குத்தான் கொடுக்கப்பட்டது. வன்னிக்குப் போனால் நிறையச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தில் தங்கம்மாளும் மறுப்புச்சொல்லாமல் அவரை அனுப்பி வைத்தாள். சுப்பையரும் முதலில் சென்று காணியைப் பார்த்துவிட்டு வந்து மனைவியிடம் சொன்னார், "தங்கம் எங்களுக்கு வீடு கட்ட மேட்டுக் காணியும், விவசாயத்திற்குப் பத்து ஏக்கர் காணியும் தந்திருக்கிறார்கள். அரசாங்கம் கடனாகப் பணமும் தருகிறது. நாம் இனி நல்ல நிலைக்குவந்து விடலாம். 'நான் போய் முதலில் வீட்டைக்கட்டிக் கொண்டு உன்னைக் கூப்பிடுறன்" என்றார். தங்கம்மாளும் பணம், பொருள் அதிகமாகக் கிடைக்கப்போகிறதே என்ற ஆசையினால் கணவனை அனுப்பி வைத்தாள்.

சுப்பையர் அன்று போனவர் தான் திரும்பி வரவே இல்லை. ஊரார் ஏதேதோ சொன்னார்கள். அவர்களுக்கு என்ன? நரம்பில்லாத நாக்கால் எதை வெண்டுமானாலும் சொல்லி விடுவார்கள். "நம்மைப் பாதிக்காத விடயத்தில் நாம் ஏன் மனதைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருக்க வேண்டும்" என்று தங்கம்மா மாவாள் சும்மா இருக்க முடிகிறதா? என்ன?! சுப்பையர் வன்னியில் ஒரு குடும்பத்தை ஏற்படுத்திவிட்டார் போல் இருக்கிறது. அதுதான் அவனுக்குத் தங்கம்மாளின் ஞாபகம் வரவில்லை. பாவம் தங்கம்மா! எப்படித்தான் மகனைக் காப்பாற்றப் போகிறாளோ? என்றனர் பலர்.

இவர்கள் இப்படிக் கூறிய பொழுது தங்கம்மாளுக்கு உள்ளூரப் பயம் இருந்தாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் 'அப்படியொன்றும் இராது'— 'அவர் கெதியா வந்திடுவார்' — என்று கூறி அவர்களைச் சமாதானப்படுத்தி விடுவாள்.

ஊரார் சொல்வதிலும் நியாயம் இருக்குமோ? நெருப்பில்லாமல் புகை வராதே! என்று எண்ணித் தங்கம்மாள் மனம் கலங்கினாள்.

தானே ஒருதடவை இளங்கோவையும் அழைத்துக் கொண்டு வன்னி சென்று கணவரைப் பார்த்து வரலாமா என்று கூட எண்ணினாள்.

ஆனால் அந்த வன்னிக்காட்டுக்குள் எப்படி ஒரு பெண் தனியாகப் போவது? அப்பொழுதுதான் அவளுக்கு ஒரு நினைவு வந்தது. அடுத்த ஊரில் சின்னராசன் என்பவன் வன்னியில் விவசாயம் செய்பவன். சென்ற கிழமைதான் வந்தவனும். அவனிடம் கேட்டால் ஒரு வேளை வழி சொல்வான் என்று எண்ணி அவனை நாடிச் சென்றாள் தங்கம்மாள்.

சின்னராசனிடம் விடயத்தைக் கூறியதும் அவன், 'அக்கா நீங்கள் தனியாக போக ஏலாது! வேண்டுமானால் நானும் கூடவாறன்.' என்றான். 'வேண்டாம்' என்று மறுத்த அவள், அவனிடம் விபரத்தை அறிந்துகொண்டு அன்று மத்தியானமே வன்னி நோக்கிப்புறப்பட்டுவிட்டாள்.

தங்கம்மாள் வன்னியில் வந்து இறங்கிய பொழுது நன்கு இருட்டிவிட்டது. இர்த இருட்டில் எப்படி வீட்டைக் கண்டுபிடிப்பது. எனினும் அவள் துணிந்துவிட்டாள்! அவள் வழியில் கண்ட ஒருவரிடம் 'சுப்பையாவின் வீடு' எது? என்று விசாரித்தாள். 'அதோ அந்தத் தென்னை மரம் தெரியும் வீடுதான் சுப்பையாவின் வீடு' என்று சொல்லியவன், ஆமா! நீங்க யாரம்மா?"

அவனதுகேள்விக்கு விடை முடியயளிக்கவில்லை அவளால். விரைந்துநடந்தாள்குறிப்பிட்ட வீட்டை நோக்கி.

வீடு அழகாகக் காட்சியளிக்கிறது. "வீடு கட்டிவிட்டாரே! என்னிடம் ஏன் இதை இவர் தெரிவிக்கவில்லை" என்று எண்ணமிட்டவள், வீட்டினுள்ளே ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டு திடுக்குற்று நின்றாள்! "ஒருவேளை வீடு மாறி வந்துவிட்டோமோ? அவர் வீட்டில் குழந்தை எப்படி வந்தது" என்று திகைத்து நின்ற அவளை நிதானத்துக் கொண்டுவந்தது, உள்ளேயிருந்துவந்த சுப்பையரின் குரல் தான்.

"இஞ்சேர் செல்லம் பொடியன் பசியால் கத்துகிறான், கெதியா வாவன்."

சந்தேகமில்லை, சுப்பையரின் குரல்தான். வேலியின் நீக்கலூடாகப் பார்க்கின்றாள். சுப்பையர்தான். அவள் கண்களில் நீர் முட்டி நின்றது. "கணவர் துரோகம்செய்துவிட்டாரா? அப்படியே மலைத்து நின்றவள் எவ்வளவு நேரம் தான் அப்படி நின்றாளோ?- வெறிச்சோடிக்கிடந்த வீட்டில் வெறிச்சோடிய மனத்துடன், வந்து படுத்துக்கொண்டது தான் தெரியும்.

●

அம்மா வந்திட்டீங்களா? அப்பாவைப் பாத்தீங்களா? என்றபடியே ஓடிவந்து தாயைக் கட்டிக்கொண்டான். பக்கத்து வீட்டிலிருந்த இளங்கோ அவளைக் கண்டதும் அவளின் கண்களில் நீர்பொங்கியது. 'அவனை நான் எப்படி வளர்க்கப்போகிறேன்.'

என்னை அவர் மறந்துவிட்டாலும் நான் அவருக்காக வாழ்ந்து மகனை வளர்ப்பேன். அவனை நிழல்தரும் மரமாக வளர்த்து, அதன் நிழலில் நான் இளைப்பாறுவேன் என்று உறுதி பூண்டாள் அவள். அந்த உறுதி அவளை ஒரு தெய்வப் பெண்ணாக மாற்றிவிட்டது. எப்படியோ கஷ்டப்பட்டுத் தன்மானத்தோடு சம்பாதித்து மகனைப் படிக்கவைத்தாள். இளங்கோவும் குடும்ப நிலையுணர்ந்து படிக்கத் தொடங்கினான். அந்தப்படிப்பின் அறுவடையாக இன்று அவன் ஒரு கல்லூரி ஆசிரியனாக மாறிவிட்டான்.

●

அன்றுபாடசாலைவிட்டு வீட்டுக்கு வந்த இளங்கோ, வீட்டினுள்ளே ஓர் ஆண்குரல் கேட்டுத் திடுக்குற்று நின்றான். "தங்கம்மா என்னை மன்னித்துவிடு, பாவத்திற்குப் பயன் அனுபவித்துவிட்டேன், நான் அவள் அழகில்மயங்கினேன். அவளோ என் சொத்தில் மயங்கினாள். சொத்து முழுவதும் அவள் கைக்கு மாறியதும் என்னை உதறித்தள்ளிவிட்டாள். நான் உனக்குச் செய்த துரோகத்தை மறந்து என்னைஏற்றுக்கொள்" என்று மன்றாடினார் சுப்பையர்.

"ஐயோ இப்படிப் பேசாதிங்கோ! இப்ப என்னதான் நடந்திட்டுது; "நடந்ததை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்துவிடுங்கோ" - என்ற தாயின் குரலைக் கேட்டதும் இளங்கோவுக்கு எல்லாமே புரிந்துவிட்டது.

அவனது இரத்த நாளங்கள் புடைத்தெழுந்தன.- 'இவ்வளவு காலமும் நாங்கள் கஷ்டப்படேக்கை வந்து பார்க்காதவர் இப்ப நாங்கள் நல்லாயிருக்கேக்கை வந்திட்டார்' என்று கறுவியவன் புயலென உள்ளே நுழைந்தான். "வா இளங்கோ" என்று வரவேற்றாள் தங்கம்மாள். இளங்கோ, தகப்பனாரை உற்றுப் பார்த்தான். அவன் கண்களில் பரிதாபம் பரிதவித்தது.

"என்ன தம்பி அப்படிப் பார்க்கிறாய்? அவர்தான் உன் அப்பா" என்றாள் தங்கம்மாள்.

"அப்பாவாம் அப்பா! இவ்வளவுகாலமும் எங்களை மறந்து இருந்துவிட்டு, கெட்டொழிந்து போனபின்புதான் ஞானம் பிறந்து வந்திருக்கிறார்"-அவன் சொல்லிமுடிக்கவில்லை. தாயின் கரங்கள் மாறிமாறி அவன் கன்னங்களில் பதிந்தன.

"ஏன்டா அவர் எங்களை மறந்தாலும் நாங்கள் அவரை மறக்கேல்லையே! அவர்எங்கே?

(9-ம் பக்கம் பார்க்க)

# தேர்தல் தெருக் கூத்து

— வர்ணம் —

தேர்தல் தெருக்கூத்து,
தெருவெங்கும் கொண்
டாட்டம்,
வாழைமரப் பந்தல்
வகையான தோரணங்கள்,
மூலை முடுக் கெல்லாம்
முன்னேற்றம்இப்பொழுது!

காரில் உலா செல்லும்
கனவான்கள் பலபேரும்
காலில் நடந்துவரும்
காட்சி வெகுநேர்த்தி!
நாட்டுக் குழைப்பதிலே
நல்லவர்கள் நாங்களேதாம்
-என்று சொல்லி
வீட்டுக்கு வீடு
விருந்துக்குப் போவதுபோல்
ஓட்டுக்கள் கேட்டு
உலா வருவார் வேட்பாளர்,

அச்சு எழுத்துக்களை
அழகாகக் கோர்ப்பது
போல்,
கட்சிப் பெயர்சொல்லி
கருத்தான கொள்கைகளை
மெச்சும்படியாக
மேடைகளில் முழக்கிடுவார்

வானத்தை வில்லாக
வளைத்துநான் தந்திடுவேன்,
மண்ணைக் கயிறாக
மறுக்காமல் முறுக்கிடுவேன்

எல்லார்க்கும் இருப்பிடங்
கள்.
எல்லார்க்கும் தொழில்
வாய்ப்பு,
இல்லார் என ஒருவர்
இல்லாமல் செய்திடுவேன்,
இவ்வாறு வாக்குறுதி
வாரி வழங்கிடுவார்!
ஏழை எளியோரிடம்
இரக்கமாய் நடந்திடுவார்,
கூனிக்குறுகி நின்று
கும்பிடுகள் போட்டிடுவார்,
அள்ளி வழங்குவதில்
அவர்க்கீடு அவரேதாம்!
என்னே இவர் எளிமை!
என்னே இவர் பெருமை!
என்னே பெருந்தன்மை!
என்னே உயர் பண்பு!
என்றெல்லாம் வாக்காளர்
எண்ணும்படியாக,
நன்றாய் நடித்திடுவார்,
நயமாய்க் குழைந்திடுவார்.
-இவ்வாறு

தேர்தல் தெருக்கூத்து
தெருவெங்கும் நடந்த
பின்பு
தேர்தல் சுயம்வரமாம்!
சரியான மாப்பிள்ளை
தெரிவாகும் நிகழ்ச்சியது.

வாக்காளப் பெருமக்கள்
வடிவாக சிந்தித்து
இனமும் மொழியும்
எதிர்கால சந்ததியும்
அழியா முறையில்
அரவணைக்கும் பேர்வழிக்கு
வாக்கை அளித்து
வழியனுப்பி வைப்பசனை
இருபத்து ஓராம் நாள்
இனிதாகப் பார்த்திடலாம்!




### கலாயோகி ஆனந்த குமாரசுவாமியின் மூதாதையர்

# விக்ரோறியா மகாராணி முன் அரிச்சந்திரன் நாடகம் நடத்தி பரிசு பெற்றவர்

ச. அம்பிகைபாகன்

குமாரசுவாமி முதலியார் இறந்தபின் இரண்டு வருடங்களாக அவருடைய இடத்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை. காரணம் இப்பதவிக்கேற்ற தகுதியும் ஆங்கில அறிவுமுடையவர் ஒருவர் கிடைக்காமையே. கடைசியில் 1838ம் ஆண்டில் சிறந்த கல்விமானும் வழக்கறிஞரும் கல்விட்டையைச் சேர்ந்தவருமான சைமன் காசிச் செட்டி நியமிக்கப்பட்டார். இவருக்குப்பின் குமாரசுவாமி முதலியாரின் குடும்பத்தினரே இப்பதவியை நெடுங் காலம் வகித்து வந்தனர். சைமன் காசிச்செட்டிக்குப்பின் குமாரசுவாமி முதலியாரின் மருமகன் எதிர்மனசிங்கமும் அவருக்குப்பின் முதலியாரின் மகன் முத்துக்குமாரசுவாமியும் அவருக்குப்பின் அவர் மருமகன் இராமநாதனும் நியமிக்கப்பட்டனர்.

குமாரசுவாமி முதலியார் மாணிப்பாய் காராளசிங்க முதலியாரின் வம்சத்தில் தோன்றியவரும், வைரவநாதரின் மகளுமான விசாலாட்சியை மணந்தார். இதன் பயனாக முத்துக்குமாரசுவாமியென்னும் மகனும், செல்லாச்சியென்னும் மகளும் தோன்றினர். செல்லாச்சி மானிப்பாய் பொன்னம்பல முதலியாரை விவாகஞ்செய்து குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் என்னும் மும்மணிகளைப் பெற்றனர். விசாலாட்சி தெய்வ பத்தியில் சிறந்து விளங்கியதோடு, தமிழிலும் சங்கீதத்திலும் நல்ல ஞானம் படைத்திருந்தார். இவருடைய தெய்வபக்தியைப் பற்றி சேர் அருணசலம் தமது முருக வழிபாடு என்னும் நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''தனது மகன் முத்துக்குமாரசுவாமி சிறு பிள்ளையாயிருந்த பொழுது ஏற்பட்ட நோய் மாறவேண்டுமென்று செய்துகொண்ட நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு எனது பேத்தியார் சீரான பாதையில்லாத அக்காலத்தில் கால் நடையில் கதிர்காம யாத்திரை செய்தார்''.

முத்துக்குமாரசுவாமி இரண்டு வயதுக்குழந்தையாயிருக்கும்பொழுதே தகப்பனர் இறந்து விட்டார். அதனல் அவனுக்குச் சிறந்த கல்வியூட்டி வளர்க்க வேண்டிய பொறுப்பு தாயாராகிய விசாலாட்சியைச் சார்ந்தது. அவர் தமது கடமையை எப்படி நிறைவேற்றினரென்பதை, மகனின் பிற்கால வாழ்க்கையிலிருந்து நாம் அறியலாம்.

**கலாயோகியின் பெற்றோர்**

முத்துக்குமாரசுவாமி கலாயோகியின் தந்தையார் நாம் முன்பு குறிப்பிட்டதுபோல் குமாரசுவாமி முதலியாருக்கும் விசாலாட்சி அம்மையாருக்கும் ஏக புதல்வராக 1834ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் திகதி கொழும்பு முகத்துவாரத்தில் தோன்றினர். இவருடைய தந்தையார் இவர் இரண்டு வயதுக் குழந்தையாகவிருக்கும் பொழுதே இறந்துவிட்டபடியால் இவர் தாயாரின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார். இவருடைய ஆரம்பக்கல்வி வீட்டிலேயே சிறந்த ஆங்கில ஆசிரியர்களால் கொடுக்கப்பட்டது. பின்னர் ஒன்பது வயதில் தகப்பனர் படித்த செமினரியில் -(மகன் காலத்தில் கொழும்பு அக்கடமியென்று அழைக்கப்பட்டது) சேர்க்கப்பட்டார். அங்கு ஆங்கிலம், தமிழ், சிங்களம், பாலி, லத்தீன், கிரேக்கம் முதலிய பாஷைகளைக் கற்றார். முத்துக்குமாரசுவாமி அக்கல்லூரியில் முதல் மாணவராக விளங்கிய படியால் இவருக்கு ரேனர் (Sturnour) பரிசு வழங்கப்பட்டது. இவருக்குப்பின்னர் இவர் குடும்பத்தைச் சேர்ந்த மூவர்- பொன்னம்பலம்அருணசலம், அருணசலம் மகாதேவா, மகாதேவா பாலகுமார்- அடுத்தடுத்து இப்பரிசைப் பெற்றனர். பாலகுமார் மகனுக்கும் இப் பரிசு கிடைத்திருக்க வேண்டும். ஆனல் காலமாறு பாட்டினல் இவருக்குக் கிடைக்கவில்லையென்பர். முத்துக்குமாரசுவாமி கல்லூரியில் படித்ததற்கு மேலாக வண. டாக்டர் மக்வா (Rev. Dr. Mciver) என்பவரிடம் தத்துவ சாத்திரத்தை விசேடமாகக் கற்றுக் கொண்டார்.

1951ம் ஆண்டில் குடியேற்ற நாட்டு மந்திரியின் மகன் ஸ்ரான்லி பிரபு இலங்கைக்கு வந்தபொழுது, அவருக்கு முத்துக்குமாரசுவாமியின் இல்லத்தில் ஒரு விருந்துபசாரம் நடைபெற்றது. அவ்வுபசாரத்தில் தேசாதிபதி அண்டர்சன பிரபு இலங்கைவாழ் தமிழருக்கு நல்வாழ்த்துக்கூறி ஒருரை நிகழ்த்தினர். இதற்கு விடையிறுக்குமுகமாக பதினெட்டு வயது நிரம்பாத முத்துக்குமாரசுவாமி அரியதோருரை நிகழ்த்தினர். இதனல் கவரப்பட்ட தேசாதிபதி முத்துக்குமாரசுவாமியை 'சிவில் சேர்விஸ்' உத்தியோகத்தராக நியமித்தார். இவர் முதலில் கொழும்புக் கச்சேரியிலும் பின்னர் முல்லைத்திவில் நீதிபதியாகவும் கடமையாற்றினர். மிகவும் இளம் வயதில் நீதிபதியாக நியமிக்கப்பட்டபடியால் இவர் ''பையன் நீதிபதி'' (Boy magistrate) என்றழைக்கப்பட்டார். இவருடைய ஆற்றல்களுக்கு அரசாங்கஉத்தியோகம் உகந்ததாக அமையவில்லை. ஆகவே அவ்வேலையைவிட்டு சேர் ரிச்சேட் பொர்கஃ என்னும் பிரபல அப்புக்காத்தின் கீழ் சட்டமாணவனகப் பதிவு செய்து சட்டத்தைப் பயின்று வந்தார். 1856-ம் ஆண்டில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவருடைய பேச்சுவன்மையினலும் அப்புக்காத்துத்தொழிலில் முன்னேறி சிறிது காலத்தில் கொழும்பில் இவரே சிறந்த அப்புக்காத்தாக விளங்கினர்.

இவர் அப்புக்காத்தாகவிருக்கும் காலத்தில் சமயத்துறையிலும் அரசியல்துறையிலும் அதிக ஊக்கம் காட்டினர். 1857-ம் ஆண்டில் அப்பொழுது இவருக்கு வயது 23 வரையில் தானிருக்கும். இலங்கை றேயல் ஏஷியாற்றிக் சங்கத்தின் (C. R A. S.) ஆதரவில் சைவசித்தாந்தம்என்னும் பொருள்பற்றி ஒரு கட்டுரை படித்தார், இக்கட்டுரை அச்சங்கத்தின் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பின்னர் 1860 ம் ஆண்டில் ''இந்திய தத்துவ சாத்திரம்'', என்னும் பொருள்பற்றி அதே சங்கத்தில் ஒரு கட்டுரை படித்தார். இவற்றிலிருந்து தமிழிலும், சமய சாத்திரங்களிலும் இவருக்கு எவ்வளவு அறிவிருந்திருக்கிறதென்பது புலப்படுகிறது. அக்காலம் சித்தாந்த சாத்திரங்கள் அச்சில் வராத காலம், அக்காலத்தில் எப்படி இவ்விஷயங்களைப் படித்து ஆராய்ச்சிக் கட்டுரைகள்எழுதினரென்பது புதிராகவிருக்கிறது ஆனல் ஒன்று நன்கறியக்கூடியதாகவிருக்கிறது. கொழும்பு அக்கடமியில்படித்த தமிழர் தமிழை நன்கு கற்றார்கள். முத்துக்குமாரசுவாமிக்கு முன் தமிழர் பிரதிநிதியாக இருந்த சைமன் காசிச் செட்டியும் இவரும் அக்கடமியில் படித்தவர். இவரும் நல்ல தமிழ் அறிவுடையவராகிஇருந்தார். பின்னர் இந்நிலை மாறிவிட்டது. முத்துக்குமாரசுவாமியின் சைவ சித்தாந்தம்பற்றிய கட்டுரை அவ்விஷயம்பற்றி ஆங்கிலத்தில் வெளிவந்த முதல் கட்டுரையாகக்கொள்ளலாம்.

இக்கட்டத்தில் பின்பு இவர் வெளியிட்ட நூல்களைப்பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமானதாகவிருக்கும். 1863-ம் ஆண்டில் இவர் இங்கிலாந்திலிருந்த காலத்தில் அரிச்சந்திர நாடகத்தைத் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விக்ரோறியா ராணி முன் அவரது அரண்மனையில் நடித்துக்காட்டி அவருடைய பாராட்டைப் பெற்றார். இந்நாடகத்தில் அரிச்சந்திரனக இவரே நடித்தாரென்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலை அச்சிட்டு வெளியிட்டபொழுது அதனை விக்ரோறியா ராணிக்கு அர்ப்பணம்செய்தார். 1874-ம் ஆண்டில் புத்தரின் தந்த..தின் சாத்திரத்தைக்கூறும் ''தத்வம்சம்'' என்னும் பாளி நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அதே ஆண்டில் புத்தரின் ..பாஷணைகளையும், உபதேசங்களையும் கொண்ட ''சுத்தநிபாதம்'' என்னும் பாளி நூலையும் ஆங்கிலத்தில் வெளியிட்டார் கலாயோகியும் தந்தையாரின் வழியைப் பின்பற்றி ''புத்தரும் புத்தரின் போதனைகளும்'', ''இந்து சமயமும் புத்தசமயமும்'' என்னும் நூல்களைப் பின்னர் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். முத்துக்குமாரசுவாமி தாயுமானவர் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து குறிப்புகளுடனும், முன்னுரையுடனும் அச்சிடுவித்தார். ஆனல் இந்நூல் வெளிவரவில்லை. சில பிரதிகள் அரிதாகக் கிடைக்கின்றன.

(தொடரும்)

---

### காந்திஜி விரும்பாதது

பிள்ளைகளுக்குப்பெற்றோர் எழுதும்போதும், மனைவியருக்குக் கணவன்மார் எழுதும்போதும், தாய்மொழியில் எழுதாமல், ஆங்கிலத்தில் எழுதுவதைச் சிறிது கூட என்னல் சகிக்க முடியவில்லை.

—காந்தியடிகள்.

---

# சிறுவர்க்கு நாட்டுப்பற்றை ஊட்டும் சுத்தானந்தர் பாடல்கள்

அழ. வள்ளியப்பா

தற்காலச் சிறுவர் நிலை பரிதாபம்! அனுவசியமான புத்தகச்சுமை! வயதுக்கு மிஞ்சிய பள்ளிச்சுமை. கூட்டு நெஞ்சு; குழிந்த கண்: கண்ணாடிப் பார்வை; கூன் முதுகு! பரிதாபம்! குனியாதேடா கூனப்பாண்டியா! நிமிர்நேரே! என் பாரம் மஹா கவி பாரதியார்; அவரைப்போலவே நமது சுத்தானந்தபாரதியாரும் ''தலை நிமிர் தமிழா'' என்கிறார். சிறுவர்களை அவர் கபாத்து வாங்குகிறார் பாருங்கள்.

''தேசப் பயிற்சிசெய்வோம்-
வரிசையில்
சேர்ந்து நிமிர்ந்து
நிற்போம்''

இதோடு விட்டாரா?

''வேமாய் கால்வீசி
-நடப்போம்
வேங்கைபோல் பாய்ந்திடு
வோம்''

வேங்கைபோல முன்னே பாயச் சொல்கிறார். உலகத்திலே அதிக தூரம் பாயக்கூடியது வேங்கைதானே? அப்படியே சிறுவர்களும் தாவிக்குதித்து விளையாட-வேண்டும் என்கிறார் சுத்தானந்தர்.

இந்தப் பாட்டைப்போலவே அவர் சிறுவர் சிறுமியருக்கு எழுதிய பாடல்கள் பலவற்றிலும் அடிக்கடி உடல் உறுதி பற்றியும் மன உறுதிபற்றியும் அழுத்தமாகக் கூறுகிறார் பல சந்தங்களில் கூறுகிறார்;

வேண்டுமென்ற பாடலிலே குழந்தையைப்பார்த்து:

''மெய்மை ஒழுக்கம்
வேண்டும் -நெஞ்சில்
வீர உறுதி வேண்டும்''

எனப் புத்திமதி கூறுகிறார்.

உண்மையாகவும் நேர்மையாகவும் நடப்பதற்கு நெஞ்சிலே உறுதிவேண்டும். சாதாரணஉறுதிபோதுமா, வீரஉறுதி வேண்டும், மகாத்மா காந்தியைப்பற்றிப் பாடும்போது கூட

தேசத்திலே பெரிய தாத்தா
-நாங்கள்
தெய்வம் எனக் கொண்டா
டும் தாத்தா.

எனத் தொடங்கி,

கோழைத்தனம் விடுத்து
நாங்கள்-சிம்மக்
கூட்டம் போல் எழச்செய்த
தாத்தா
அஞ்சாத நெஞ்சுடைய
தாத்தா- உண்மை
அஹிம்சை விரதங்கொண்ட
தாத்தா.

என்று பாட்டின் நடுப்பகுதியில் குறிப்பிடுகின்றார்.

அஹிம்சை கோழைகளின் ஆயுதம் என நினைப்பவர்களும் இருக்கிறார்கள். ஆனல், அது கோழையின் ஆயுதம் அல்ல. வீரனின் ஆயுதம் என்பதை மகாத்மாவின் வாழ்க்கையிலே நாம் கண்டோம். குத்தும் கொலையும் நடந்த நவகாளியில் நடையாகவே சென்று அஹிம்சைப்பாதையில் மக்களைத் திருப்ப மகாத்மா பாடுபட்டாரே; அதை என்னவென்று சொல்வது? அசாத்தியமான நெஞ்சுறுதியும், அதிசயிக்கத்தக்க வீரமும் மகாத்மாவிடம் இருந்ததால்தான், குண்டுக்கும் அவர் அஞ்சவில்லை, குண்டினல் விளைந்த சாவுக்கும் அவர் அஞ்சவில்லை. இதேபோல வீர உணர்ச்சியை இளைஞர்க்கு ஊட்டி, அவர்களைத் தட்டி எழுப்பும் எத்தனை எத்தனையோ கவிதைகளை சுத்தானந்தர் இயற்றியுள்ளார்.

ஆங்கிலேயர் நம்மை அடிமையாக்கி ஆண்டுவந்தபோது சிறுவர் சிறுமியர் பாடிவந்த ஒரு பாட்டு நினைவுக்குவருகிறது.

'பிறந்தநாடு சிறந்து வாழப்
பெருமை நாட்டுவோம்-
உண்மை
அறிந்த தியாக வீரர் சூழ,
அச்சம் ஓட்டுவோம்
ஏக்கமின்றி தூக்கமின்றி
இளைய சிங்கங்கள்-
நம்மைத்
தாக்குகின்ற அடிமைப்
பேயைத்
தகர்த்து வீசுவோம்'

இத்தகைய பாடல்களைப் பாடும் சிறுவர் சிறுமியர் நாட்டுப்பற்று, விடுதலை வேட்கை, தியாகபுத்தி முதலிய அருங்குணங்களை அடைவார்கள் என்பதில் ஐயமுண்டோ? வருங்கால மக்களை உருவாக்கும் பணி. மிகவும் சிறந்ததொரு பணி. அதற்குக் கவியோகி சுத்தானந்தார் அவர்கள் வழி காட்டுகின்றார்கள். அவர்களை பின்பற்றி நாமும் செல்வோம்; நலம் பல புரிவோம்.

---

### அழுகை!

உறவுகள் பிரியும் போது
உதிர்வது கண்ணீராகும்
'அருமைகள்' இழக்கும்
போது
அருவியாய் கண்ணீர்
கொட்டும்
உள்ளங்கள்
துயரடைந்தால்
உதிரமே கண்ணீராகும்

அழுதிடக் கண்ணீர்
போகும்
அழுத்திடும் துயரும்
மாறும்
அழுகையோடிந்த
மண்ணில்
அவதரித்திட்ட மாந்தர்
அழுதுதான் வாழ
வேண்டும்
அழுதால்தான் அழுக்குப்
போகும்
அழுகையே ஞானம்
என்னும்
அழகான மழைக்கு
மின்னல்!

—ரவி

# வேலை தேடி வெளிநாடு செல்லும் நமது இளம் பெண்கள்

**வெளிநாடுகளில் வேலைதேடிச் செல்லும் எல்லாருமே நல்ல நிலையில் இருக்கிறார்களா? பண வசதியில்லாதவர்கள், குறிப்பாக இளம்பெண்கள் அநாதரவாகி மானத்தை விற்றுப்பிழைக்கும் நிலைக்காளாகிறார்களாம். இதோ 'ஈரானில்' வேலைதேடிச் செல்பவர்களின் நிலைபற்றி அங்கிருந்து எம். ஸ்ரீகாந்தா என்பவர் எழுதுகிறார்.**

தெஹ்ரான் ஈரானின் தலைப்பட்டணம். இங்குள்ள மொழி பேர்சியன். அமெரிக்காவின் ஆதரவுடன் எண்ணைக்காசில் அமெரிக்க பாணியில் அழகாக கட்டியிருக்கிறார்கள் நகரத்தை. ஒரே புதுக் கார்களாக விதம்விதமாக ரோட்டில் காட்சியளிக்கின்றன. வீதி நெருக்கடி தவிர்க்கமுடியாததாகி விட்டது. மன்னர் ''ஷா''வின் உத்தரவுப்படி குறிக்கப்பட்ட காலத்தில் எண்ணை முடிவடைந்ததும், விவசாய கைத்தொழில்களில் நாட்டை வளர்த்தால்தான் தொடர்ந்து பொருளாதார ரீதியில் தலைநிமிர்ந்து நிற்கமுடியும் என்பதால் ஈரானை விவசாய கைத்தொழில் நாடாக்க பெருமுயற்சி எடுக்கிறார்கள். பொறியியல்துறையில் பட்டம் பெற்றவர்களுக்கும், பயிற்றப்பட்டவர்களுக்கும் வேலை வாய்ப்புகள் உள்ளபடியால் உலகின் பலபாகங்களில் இருந்தும் குறிப்பாக ஆசிய நாடுகளிலிருந்து பெருவாரியாக வந்துகொண்டிருக்கிறார்கள்.

## வாழ்க்கைச் செலவு

இங்கு ஒரு யு. எஸ். டொலரின் பெறுமதி 70.50 றியாஸ். வாழ்க்கைச்செலவு மிக அதிகம். தங்குமட வசதியென்பது மிகவும் கடினமான விடயம் (மண்டபம்மாதிரி) ஹோட்டல்களில் ஐந்து படுக்கைகள் கொண்ட அறையில் ஒரு படுக்கைக்கு 150 றியாஸ். இங்கு வேலைசெய்பவர்களில் 90 வீதமானவர்கள் ஹோட்டல்களில்தான் தங்குகின்றார்கள். குடும்பஸ்தர்கள் மட்டும் ஒரு சிறிய அறை அதற்கேற்ப ஒரு சிறியஹோல், ஒரு குசினி, ஒருமலசலகூடம் ஆகியவைகள் கொண்ட ஒரு பகுதிக்கு மாதம் ஆகக்குறைந்தது 20,000 றியாஸ் (கிட்டத்தட்ட 300 யு. எஸ். டொலர்) அத்துடன் வீட்டுச் சொந்தக்காரர்கள் ஆகக்கூடியது மூன்று பேருக்கு மேல் தங்கக்கூடாது என்ற எழுத்துமூலமான நிபந்தனையுடன்தான் வீடு கொடுப்பதுடன் அடிக்கடி யார்? யார்? இருக்கிறார்கள் என்றும் பார்த்துக் கொள்வார்கள். இங்குள்ள மக்களின் வழக்கமான சாப்பாடு ''செலாக பாப்' (அதாவது கோப்பை சோறும், ஒருதுண்டு பட்டரும், இறைச்சியில் அரைத்து கொழுக்கட்டை மாதிரி செய்தது இரண்டு துண்டுகள்) இச் சாப்பாட்டின விலை 90 றியாஸ். பருப்பும் றொட்டியும் அல்லது கடலையும் றொட்டியும் முறையே 30, 40 றியாஸ். இவைதான் காலை, மாலை உணவுகள்.

உடுப்புகள் எல்லாம் விலை. உதாரணம்; ஒருசேட் குறைந்தது 1 00 றியாஸ். எனவே சாதாரண சாப்பாட்டுக்கு ஒருநாளைக்கு 150 றியாசும், சில்லறைச் செலவுகட்கு 100

எம். ஸ்ரீகாந்தா

றியாசும் தேவை. ஒரு சிகரட் பைக்கட்டின் விலை 40 றியாஸ். ஒரு நாளைக்கு செலவுக்கு 4—5 டொலர் தேவை.

இங்கு அமெரிக்க பாணியில் உடுப்புவகைகள்தான் அணிவார்கள். பெண்கள் ''மொட்டாக்கு'' போடுவதில்லை. அவர்களும் கவுண்தான் அணிவார்கள். முஸ்லீம் நாடாக இருந்தும் தலைப்பட்டணத்தில் ''நியூசிற்றி'', ''கோம்புறாக்'' என்ற பகுதிகள் சிகப்பு விளக்கு பகுதியாக சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. அதாவது விபசாரம் இங்கு சட்டரீதியானது. இங்கு விபசாரம் செய்யும் பெண்களுக்காகவும் பெண்களிடம் வருபவர்களுக்காகவும் – நலன்கருதி பொலிஸ் நிலையம், வைத்தியசாலை ஆகியவைகளை ஈரான் அரசு செய்து கொடுத்து இருக்கிறது.

இங்கு இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற ஆசிய நாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் விசாவில் வருவார்கள். தமது விசா முடிவடையும் காலத்துக்கிடையில் வேலை பெற்றுக் கொண்டால் வேலை பர்மிட்டுக்கு' விண்ணப்பிக்கலாம். [கொம்பனி ஊடாக விண்ணப்பிக்கவேண்டும்] எல்லா வேலைகட்கும் ஈரான் அரசின் தொழில் அலுவலகம் வேலை பர்மிட் கொடுப்பதில்லை. தொழில்நுட்ப வேலைகட்குத்தான வேக் பெர்மிட் கொடுக்கும் மற்றவர்கள் (கிடைக்காதவர்கள்) கள்ளத்தோணி

## பணம் இல்லாவிடில் அனுதரவாக அந்தரிக்கும் நிலை

மாதிரித்தான் சீவிக்கிறார்கள். பின்பு தமது நாட்டுக்கு திரும்புவதானால் தொழில் அலுவலகத்துடன் தொடர்புகொண்டதும் அவர்கள் இவர்களை பொலீசில் ஒப்படைப்பார்கள். [இங்கு பொலீசிடம்தான் குடிவரவு, குடியகல்வு வேலைகள்] பொலீஸ் மேலதிகமாக தங்கிய காலத் தொகைக்கேற்ப 5000 றியாசில் இருந்து 50,000 றியாஸ் வரை தண்டம் விதிப்பதுடன் தமது நாட்டுக்கான விமான பயணச்சீட்டும் காட்டவேண்டும். இல்லையேல் தண்டனையுடன் கூடிய நாடு கடத்தல்.

### வேதனைக்குரியது

இங்கு தொழில்செய்பவர்களில் இலங்கையர் சிலர் இங்கு தமக்கு செல்வாக்கு இருப்பதாகக் கூறி அநேக இலங்கையர்களை இலங்கையில் இருந்து விமானம் மூலமாகவும் தரைமார்க்கமாகவும் இலங்கையில் அவர்களிடம் பெருந்தொகைப் பணத்தை வாங்கிக்கொண்டு கூட்டிவந்து கைவிடுகிறார்கள். அவர்கள் கையில் பணம் இன்றி நாயிலும் கேவலமாக மதிக்கப்படுகிறார்கள், ஏன் பிச்சை எடுப்பவர்களின் கீழ்த்தர வாழ்க்கையை வாழ்கிறார்கள். அவர்கள் வீடுகளில் வேலை செய்தே காலத்தைக் கழிக்கிறார்கள். இலங்கையில் நல்ல வேலையில் இருந்தவர்கள் இங்கு இப்படிச் சீவிக்கிறார்கள். இவர்கள் கூட்டிவரும் பெண்பிள்ளைகள் இங்கு அனுதையாகி மானத்தை இழந்து' சீவிக்கிறார்கள்.

குறிப்பாக தரகர்கள் மூலம் வருபவர்கள் 100க்கு 100 வீதமும் இப்படிப்பட்ட கஷ்டத்தை அனுபவிப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. அத்துடன் தரகர்களும், அவர்களின் நண்பர்களும் இளம் பெண்களை டைப்பிஸ்ட் என்றும் டைப்பிங் கிளார்க் என்றும் சொல்லி கூட்டிவந்து தமது வாடிக்கையாளர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு இளம்பெண்களை கையளிப்பதை தினசரி இங்கு பார்க்கக்கூடியதாக இருக்கிறது. ஈரானில் வேலை எடுத்துத் தருவதாக யார் கூறினாலும் ஏற்று வெளிக்கிடவேண்டாம் என்று எமது நாட்டு மக்களுக்கும் குறிப்பாக இளம் பெண்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் கூறவேண்டும்.

---

தேர்தல் காலத்தில்

# ஒரு தற்காலிக சமதர்மசமுதாயம்!

மீண்டும் ஒரு தேர்தல்!

தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்ததுமே இலங்கைக் குடியரசு முழுவதும் ஒரு புதுத்தென்பு காணப்பட்டது. நாட்டிலிருந்த அத்தனை கட்சிகளும் தேர்தல் போராட்டத்துக்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளத் தொடங்கின.

தெரு ஓரங்களில் உள்ள மதில் சுவர்களெல்லயம் விளம்பரப் பலகைகளாக மாறத் தொடங்கியிருந்தன. செக்கண்ட் ஷோ' பார்த்துவிட்டுஇருளிலும் தனிமையிலும் போராடிக் கொண்டிருக்கும் தெரு மின் விளக்கொளியில் தான் தார்ப்பேணியும் எழுதுகோலாகும் தேங்காய் மட்டையும் கையுமாகத்தங்கள் திருப்பணியை ஆரம்பிப்பார்கள் கட்சித்தொண்டர்கள். வீட்டுச் சொந்தக்காரர்பாடு திண்டாட்டம் தான், என்ன செய்வது? கேவலம் சுவர்களுக்காக மண்

குகராஜனி

டையை உடைத்துக்கொள்ள முடியுமா? பல்வேறு போட்டிக்காட்சிகளுக்கிடையே வாழவேண்டுமானால் இந்தமாதிரிச் சில்லறை விஷயங்களுக்காக அலட்டிக்கொள்ளக்கூடாது என்பது அவர்கள் கடந்த கால தேர்தற் காலங்களில் படித்துக்கொண்ட பாடம்.

நாட்டிலுள்ள கலைஞர்கள் தத்தமது கலைத்திறனை வெளிப்படுத்த வாய்ப்பளித்தது தேர்தல். கலைகள் விளம்பரங்களாக விலைபோய்க் கொண்டிருந்தது. பத்திரிகைகள் வானொலிகள் சினிமாக்கள் எல்லாமே விளம்பர ஊடகங்கள்தானே இன்று தினமும் மாலை வேளைகளில் ஊருக்கு ஊர் கிராமத்துக்குக் கிராமம் பகிரங்க தேர்தற் பொதுக் கூட்டங்கள் ஆவேசமான ஆனால் ஆபாசமான பேச்சுக்களுடன் கூத்து, பாட்டு ஆட்டம் என்பனவும் இடம் பெறுகின்றன.

### எத்தனைவித உத்திகள்

மதில்வெளிப்புறச் சுவர்களில் தென்படும் விளம்பரங்களில் தான் எத்தனைவித உத்திகள்! கவிதைகள், 'கார்ட்டூன்கள்', கேலி ததும்பும் வசனங்கள், ஆவேச மூட்டும் கோஷங்கள்...... இப்படி எத்தனையோ! கவிதை இயற்றுபவர்கள் கட்சிக்காரர்களுக்கு வேண்டிய வகையான பலரது மனத்தையும் கவர்ந்துவிடக் கூடிய கருத்துக்களை தேர்தல் விளம்பரங்களை கற்பனைசெய்து கொண்டிருந்தார்கள். கார்ட்டூன் கலைஞர்கள் எதிர்க்கட்சிகளைத்தாக்கி நீங்காத நினைவு பெறக்கூடியமாதிரி கேலிச்சித்திரங்களாக்கிக் கொண்டிருந்தார்கள். எந்த வகையான விளம்பரங்களிலும் அதில் எதிர்க்கட்சியை திறமையாகத் தாக்கக்கூடிய வகையில் அமைக்கும் திறனுடைய கலைஞர்கள் பக்கம்தான் அதிர்ஷ்ட தேவதை. அவர்கள் கலைத்திறனுக்கு பத்தாகவோ நூறுகவோ கிடைக்கும்.

சந்திக்குச்சந்தி தேர்தற் பிரசாரம் செய்வது, வீட்டுக்குவீடு சென்று வாக்காளரைச் சந்திப்பது, உயிரை அல்லது ஊரை விட்டுவிட்டுப் போய்விட்டவர்களது பதிவாகியுள்ள வாக்குகளுக்கு ஆட்களைத்தயார் செய்வது; சாம, பேத, தான, தண்ட உத்தி முறைகளினால் வாக்குகள் சேர்ப்பது....... இப்படியாக படித்த- படிக்காத ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை கிடைத்துவிட்டது.

ஆயிரக்கணக்கான மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தற்காலிகத் தீர்வு தேர்தல். அதுமட்டுமா? ஒரு சில இடங்களில் தேங்கிக்கிடக்கும் பணம் பல வழிகளில் பல ஏழைகளைப் போய்ச்சேரவும் தேர்தல்சிறந்த தொன்று. அடிக்கடி தேர்தல்கள் வந்து கொண்டிருந்தால் தேர்தல் காலங்களிலாவது நாங்கள் அடிக்கடி பேச்சளவில் சந்திக்கும் சமதர்ம சமுதாயத்தை நடைமுறையில் காணக்கூடியதாய் இருக்கும்.

---

## 'கொள்கையில்லாதவர்'

ஆலம்பழத்திற்கு அப்புறத்திலோரிரவு
வேலம்பழத்திற்கு விரைந்திடுமே மிப்புறத்தில்
ஞாலத்திற் புள்ளென்றால் நாலேர் மிருகமென்னும்
சிலத்தால் பாவென்றால் சிச்சீ பறவையென்னும்
வெளவாற் குணங்கொண்ட மனிதர் குணங்களென்ன
இவ்வாவியற்று பணியேனே இவர்க்கு இல்லை

●

பாம்பினத்தின் பக்கலிலே பரந்த சிரசசைத்து
தேப்பியழும் மீனினத்தை சேர்த்திடுமே வால்காட்டி
பாங்குதனைக் கொண்டுநிதம் பரிவாகச்சாகரத்தில்
தூங்கி ஒழியாது துள்ளித்திரிந்து நன்றாய்
ஆங்கு வளரவெண்ணும் அழியா விலாங்கினம்போல்
எங்குமிருக்கின்றார் இவர் கொண்ட
கொள்கையென்ன

●

பற்றைக்குள் வேலியிலே பகைவர் மிகவதிகம்
கற்றைக்குழையினுள்ளும் கரந்துறைவர் ஆதலினால்
எற்றைக்கும் நானுயிரை இசைவாய்ப்புரந்திடிலோ
மற்றைப் பிராணிகள்தான் மறைந்திருந்து தாக்காது
என்றுமே வர்ணத்தை எளிதாக மாற்றவெண்ணும்
அன்றுநினை பச்சோந்தி ஆவார் அமைவுஎன்ன

●

இப்பிறப்பில் மானிடராய் ஏனோ அவதரித்தார்
எப்பிறப்புந் தீயவை யிவ்வெழிலார் தனைநாடும்
சொற்பிறப்பு ஒப்பியல்பு தோன்றாப் பெருமையினார்
கற்பிளவோ டொத்திடுவர் கயவரிவர்தானே
நற்குடியின் கொள்கையிலார் நலிவாருலகினிலே
பொற்பதங்கள் தாங்கியென்றும் புகழுமடையார்கள்

—'எழினி' சி. சிவநாதபிள்ளை

# எம். ஜி. ஆர். - கருணாநிதி - பொது மக்கள்:

## இவர்களில் யாருக்கு வெற்றி?

### —ஒரு கண்ணோட்டம்

அரசியல் பிரசாரத்துக்கு சினிமாவை வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று காட்டியவர் அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள். ஆனால் சினிமாவில் இருந்துகொண்டே அரசியலில் வாழ்வை வளர்த்துக்கொண்டவர் புரட்சி நடிகர் எம் ஜி. ஆர். அவர்கள், இன்று தமிழக அரசியல் ஒப்பந்தகையே மாற்றிஅமைக்கும் அளவுக்கு அவர் வளர்ந்துவிட்டார் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஆரம்பகாலத்தில் தமிழ்நாடு முன்னாள் முதல்வரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான திரு மு. கருணாநிதியும், புரட்சி நடிகர் எம் ஜி. ஆரும் சினிமாவில் ஒன்றாகவே இருந்து வளர்ந்தவர்கள். ஒருவர்சினிமாவுக்கு திரைக்கதை வசனம் எழுத மற்றவர் அவைகளில் நடித்து இருவரும் அண்ணாவின் கொள்கைப் பிரசாரத்தை சிறப்பாகச் செய்து வந்தார்கள்.

மருதநாட்டு இளவரசி, மந்திரிகுமாரி, நாம், மலைக்கள்ளன், போன்ற படங்கள் இவர்களின் ஆரம்ப கால கலைத் தொடர்புகளைஎடுத்துக்காட்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்ததையடுத்து இருவருமே முக்கிய தலைவர்களாக உயர்ந்தனர்.

கழக அடிமட்ட ஆதரவாளர்கள் மத்தியில் இருவருக்கும் பெரும் செல்வாக்கு வளர்ந்தது.



அண்ணாவின் மரணத்தையடுத்து கலைஞர் முதலமைச்சர் பதவியில் அமர்ந்ததின் பின்னர் இரு தலைவர்களுக்குமிடையில் கருத்துவேறுபாடுகள் சிறிதுசிறிதாக வளர்ந்து விசுவரூபம் எடுத்தது. கழகத்தின் பொருளாளராகவிருந்த எம். ஜி. ஆர். பகிரங்கக்கூட்டங்களில் எல்லாம் கழகத்தின் நிதிநிலைமைகள் குறித்துக் கணக்கு கேட்டு உரைகள் நிகழ்த்தத் தொடங்கினார். இதனால் அவர் கழகக்கட்டுப்பாடுகளை மீறிவிட்டார் என்று கூறி அவரை கழகத்திலிருந்து நீக்கினார்கள். ஆனால் எம்.ஜி. ஆர். தனித்து வெளியேறவில்லை. அவருடன் நாஞ்சில் மனோகரன், கிருஷ்ணசாமி போன்றவர்களும் வெளியேறினார்கள். தொடர்ந்து வேறு பலரும் எம். ஜி. ஆருடன் சேர்ந்து கொண்டார்கள். கலைஞருக்கும் எம். ஜி. ஆருக்குமிடையில் 'நீயா நானா' என்ற ரீதியில் மோதல் ஆரம்பமாயிற்று. அண்ணா தி. மு. க. உருவாயிற்று. பிறகு அதனை அனைத்திந்திய அ. தி மு க. என மாற்றினார் எம். ஜி. ஆர்.

#### ஊழல்

#### குற்றச்சாட்டு

கருணாநிதி மீதும் அவரது சக அமைச்சர்கள் சிலர்மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டன. குடியரசுத் தலைவரிடமே இது பற்றிய மகஜர் கையளிக்கப்பட்டது. ஆனால் அதன்மீது மத்திய அரசு உடனடியாக எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நெருக்கடிநிலை அறிவிக்கப்பட்ட கையோடு, பிரிவினை முயற்சிகளுக்கு தூபமிடப்படுவதாக தி. மு. க. மீது பெரும் புகார் கூறப்பட்டு பின்னர் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அதன்பின் கலைஞர் மீதும் அவரது சகமந்திரிகள் சிலர் மீதும் ஊழல்குற்றச்சாட்டுகள் சுமத்தி விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

கருணாநிதிக்கு எதிராக எம். ஜி. ஆரும் அவரது சகாக்களும் மேடைகளிலும் திரைப்படங்களிலும் தீவிரபிரசாரம் செய்துவந்த அதே சமயம் மத்தியஅரசு தனது மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் தி. மு. க. தலைவர்கள் பற்றிய ஊழல் குற்றச்சாட்டுக்களை நாள்விடாமல் விமர்சித்துவந்தது. பிரசாரம் நடந்தவிதத்தைப் பார்க்கும்போது தமிழ்நாட்டில் தி. மு. க. முற்றாகவே ஒழித்துக்கட்டப்படும் என்றே கருதக்கூடியதாகவிருந்தது.

தி. மு. க. வை ஒழிப்பதற்கு எம். ஜி. ஆரின் அ. இ. அ. தி. மு. க. வை இந்திரா அரசு பயன்படுத்திக்கொள்ள முயன்றதேயன்றி அ. இ. அ. தி. மு. க. வுக்கு செல்வாக்கு வளர்வதை எந்தக்காரணம் கொண்டும் இந்திராகாங்கிரஸ் விரும்பவில்லை என்பது தெளிவு. எவ்வாறு கலைஞர் தலைமையிலான கழக அரசைக் கவிழ்க்க சந்தர்ப்பம் எதிர்பார்த்து காத்திருந்தார்களோ அதே முறையில் எம். ஜி. ஆர். மீதும் சரியான சமயத்தில் களங்கம் கற்பித்து மக்கள் மத்தியில்

#### பேனா

அவரையும், அவரது கழகத்தையும் செல்லாக்காசாக காட்டிவிடுவதற்கு அவர்கள் திட்டமிட்டிருந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

#### மக்கள் விழிப்பு

ஆனால், தமிழ்நாடு மக்கள் விழிப்பாக இருந்துள்ளார்கள். அவர்கள் அறிஞர் அண்ணாவின வழியிலிருந்து வழிதவறிச் சென்றுவிடவில்லை.



அண்ணாவின் கொள்கைகளை செயல்படுத்துவேன் என்று கூறும் எம். ஜி. ஆரின் கட்சியைப் பதவியில் அமர்த்தியதோடு, அவர் உண்மையில் அண்ணாவின் வழியில் செயற்படுகிறாரா என்பதைக் கண்காணிக்கும்வகையில், அண்ணாவின் உண்மைத் தம்பிகள் என்று கூறிக்கொள்ளும் கலைஞரின் தலைமையிலான கழகத்தைப் பிரதான எதிர்க்கட்சியாகத் தெரிவுசெய்து கலைஞரை எதிர்க்கட்சித் தலைவராக்கியிருக்கிறார்கள்

இங்கே நாம் ஒரு சுவையான விஷயத்தைக் கவனிக்கலாம்.

கலைஞரின் ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டதாகக் கூறிய மக்கள்திலகம் எம். ஜி இராமச்சந்திரன் அ. இ. அ. தி. மு. கழகத்தை ஆரம்பித்து அதனை மக்கள் முன் நிறுத்தி அவர்களின் அமோக ஆதரவைப் பெற்று ஆட்சிஅமைத்துள்ளார் இது அவருக்கும் அவர் பின்பற்றும் அண்ணாவின் கொள்கைக்கும் கிடைத்த மகத்தான வெற்றியாகும்.

அதேசமயம், லோகசபைத் தேர்தலில் - ஆக ஒரே ஒரு இடத்தை மாத்திரம் வென்றெடுத்த கலைஞரின் தலைமையிலான கழகம், சட்டசபைத் தேர்தலில் ஆற்றல்மிக்க தலைவர்கள் எல்லாம் கைவிட்டு சென்றுவிட்ட நிலையில் பேராசிரியர் அன்பழகன் போன்ற ஒருசிலரின் உதவியோடு தனது தனி ஆற்றலை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏளனம், எதிர்ப்பு, வசைமாரி - எல்லாவற்றுக்கும் முகம்கொடுத்து தனது கழகத்தை அழியவிடாமல் காப்பாற்றி பிரதான எதிர்க்கட்சியாக நிலைநாட்டிய சாதனையானது கலைஞர் கருணாநிதிக்கு கிடைத்துள்ள மகத்தான வெற்றி என்று சொல்வதில் தவறில்லை.

ஆனால் தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரை அண்ணாவின் கொள்கைகளிலிருந்து அவர்கள் மாறிச்செல்ல விரும்பவில்லை. அதனால் அண்ணாவின் பெயரில் இயங்கும் ஒரு கழகத்தை ஆட்சியிலும், அதே அடிப்படையிலான இன்னொரு கழகத்தை ஆட்சியை கண்காணிக்கும் விதத்தில் எதிர்க்கட்சியிலும் அமர்த்துவதில் வெற்றிபெற்றிருக்கிறார்கள் மக்கள் இது அவர்களுக்குகிடைத்த மகத்தான வெற்றி.

அந்தவகையில் அவர்கள் பாராட்டுக்குரியவர்களே! ஆட்சியை அமைப்பதும் அழிப்பதும் மக்கள் கையில். அவர்கள் நினைத்தால் எதையும் செய்யலாம்.

---

### ஆவியுலகத் தொடர்பு—2

## ஆவியின் உடல் எப்படி இருக்கும்?

#### ஆவி உடலின் தன்மைகள்

ஆவி உடல் நுண்ணியதும்- ஸ்தூல உடலின் சாயலையும் உடையது என்று முந்தைய கட்டுரையில் தெரிவித்திருந்தேன். இந்த ஆவி உடல் மிகவும் இலேசானது. மிதக்கும் தன்மையுடையது. உயிரோடு இருந்த காலத்தில் மனிதன் செய்த செயல் எண்ணிய எண்ணம் எல்லாம் இந்த உடலின் செயல்களே கண்,காது,மூக்கு, வாய் முதலிய புலன்களும் இதில் உள்ளன. குறிப்பாக மனம்-புத்தி இரண்டும் ஆவி உடலினுடையதே நாம் முன்பு உதாரணமாக எடுத்துக் கொண்ட கால்பந்தில் (Foot-ball) காற்று நிரப்பப்பெற்ற இரப்பர் உறை இருந்தால் தான் பந்து நாம் விரும்பும் வண்ணம் உருளும், குதிக்கும், ஓடும். உள்ளே இருக்கும் உறையை எடுத்துவிட்டால் மேல் தோல் மட்டும் விளையாட உபயோகப்படாது ஆனால் இரப்பர் உறைமட்டும் தனித்து விளையாட உதவும்.

அதேபோல்தான் ஆவிஉடல் ஸ்தூல உடலை இயக்கி இவ்வுலகத்தில் காரியங்களைச்செய்கிறது. ஆவி உடல் வெளியேறியதும் ஸ்தூல உடல் அசைவற்றுப்போகிறது. இதையே பிணம் என்று சொல்கிறோம்.

ஆவி உடல் தனித்து இயங்கும். ஸ்தூல உடல் தனித்து இயங்காது. நம்முடைய எண்ணங்கள்-பழைய நினைவுகள் அனைத்தும் ஆவி உடலிலேயே உள்ளன. புண்ணியம்செய்திருந்தால் புண்ணிய லோகத்தையோ, பாவம் செய்திருந்தால் பாவலோகத்தையோ அல்லது இரண்டுக்கும் இடைப்பட்ட மத்தியலோகத்தையோ அடைந்து இன்பதுன்பங்களை அனுபவிப்பதும் இந்த ஆவி உடலின் மூலம்தான்.

**வி. ரவிச்சந்திரன்**

#### மீடியங்கள்

நாம் இந்த உடலைப்பார்ப்பதுஇயலாது. ஆனால்சக்திவாய்ந்த மீடியங்கள்மூலம் ஆவிகள் தங்கள் உருவைவெளிப்படுத்திக்காட்டுவதுண்டு. இத்தகைய மீடியங்கள் உலகிலேயே மிகவும் அபூர்வமாக உள்ளன. ஆவி உடலில் நம் எண்ணங்கள் செயல்கள் இருப்பதால் மரணத்தின்பின்னும் அதே குணநலன்களோடும் வாழ்கிறார்கள். இப்பூவுலகில் நல்லவர்களாக வாழ்ந்தவர்கள் அங்கும் நல்லவர்களாக வாழ்கிறார்கள். இங்கு கெட்டவர்களாக வாழ்ந்தவர்கள் அங்கு கெட்டவர்களாக வாழ்ந்து நாளடைவில் திருந்தப்படுகிறார்கள். எனவே இவர்களை அழைத்துப் பேசுபவர்கள் வருவது நல்ல ஆவிகளா அல்லது கெட்ட ஆவிகளா என்பதை அனுபவத்தில் கண்டுஉணர்ந்து கொள்ளலாம்.

ஆவிகளின் உடல் இலேசாக இருப்பதால் இவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு காற்றில் மிதந்தே செல்கிறார்கள். அப்படிச் செல்லும்போது வழியில் உள்ள கட்டிடங்கள்-மரங்கள் போன்றவைகள் இவர்களைத் தடைசெய்வதில்லை. ஏனெனில் ஆவிஉடல் நுண்ணியதாகவும் புகை போன்றும் இருப்பதால் கட்டிடங்கள்-மரங்கள் இவைகளை ஊடுருவிச்சென்றுவிடுகிறார்கள் அவர்கள் செல்லும்வேகம் எழுத்தில் வடிக்கமுடியாது. மனோவேகத்தின் அளவும் ஆவிகளின் சஞ்சார வேகத்தின் அளவும்ஒன்று எனக் கொள்ளலாம். இது குறித்து ஆவிகளிடமே கேட்டோம். "தாங்கள் ஓரிடத்திற்குப் போகவேண்டும் என்று மனதால் நினைத்த அடுத்த விநாடி அந்த இடத்தில் இருக்கிறோம். அந்த இடத்திற்கு இடைப்பட்ட தூரத்தை நாங்கள் எப்படிக் கடக்கிறோம் என்பது எங்களுக்கே தெரியாது" என்று அவர்கள பதில் கூறினர். ஆவிகள் குரலை எலெக்ரானிக் முறையில் பதிவுசெய்த ஜெர்மன் விஞ்ஞானி டாக்டர் கான்ஸ்டன்டைன் ராதீவ் ஆவிகளின் பேச்சுக்கள்கூட அதிவேகமாகவும் சுருக்கப்பட்டதாயும் இருப்பதாகக்கூறுகிறார்.

**ஆவிகளின் குரலை எலெக்ட்ரானிக் முறையில் பதிவுசெய்த ஜெர்மன் விஞ்ஞானி டாக்டர் கான்ஸ்டன்டைன் ராதீவ் ஆவிகளின் பேச்சுக்கள்கூட அதிவேகமாகவும் சுருக்கப்பட்டதாகவும் இருப்பதாகக் கூறுகிறார்.**

#### மரியாதையாகப் பேசவேண்டும்

ஆவி உடலில் இருந்து சிரிப்பு உணர்ச்சி வெளிப்படும். அழுகை உணர்ச்சிவெளிப்படும் கோபமும் மகிழ்ச்சியும் கொந்தளிக்கும். எனவே அவர்களை அழைத்துப் பேசுபவர்கள் இவைகளை மனத்தில் கொண்டு அவர்கள் உயிரோடு இருப்பதைப்போலவே பாவித்து மரியாதையாகப் பேசவேண்டும். இதை எவரும் மறக்கக்கூடாது.

# புகைப்பவர்களுக்கு

# இருமல் ஒரு அபாய அறிகுறி!

**புகை பிடிக்கும் அனைவரும் படித்துப்பார்க்க வேண்டிய கட்டுரை இது. புகைப்பது ஆடம்பரமாக முதலில் தோன்றலாம்- அதன் விளைவு எவ்வளவு கொடூரமாக இருக்கும் என்பதைக் கட்டுரை விளக்குகின்றது.**



நீங்கள் புகைபிடிக்கும் பழக்கத்தினால் இருமலால் பீடிக்கப்பட்டிருக்கிறீர்களா? இவ்விருமலை இறுதி எச்சரிக்கையாகக் கருதி இன்றே புகைத்தலை விட்டுவிடுங்கள். இன்னும் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் இப்பழக்கத்தை முற்றாக ஒழிக்கத் தெண்டியுங்கள். —இவ்வாறு கூறுகிறார் சிட்னி எஸ். பீல்ட் என்ற இக்கட்டுரை ஆசிரியர்.

இதைப்பற்றிக் கேள்விப்படும் போது உங்களை இது பீடித்திருந்தால் நீங்கள் ஒன்றைப் பற்றி நம்பகமாக இருக்கலாம். அதுதான் அந்த இருமல். அபாய எச்சரிக்கை ஒலி, பரிச்சயமான அந்த குறுகிய வரண்ட இருமல் காலையில் தொடங்கி, வேறுபட்ட விதங்களில் திரும்பத் திரும்ப உண்டாகி புகைப்பவர்களுக்குத் தொல்லை கொடுக்கும். தொடக்கத்தில் மிகவும் அருமையாகத்தான் அதைக் கவனிக்கமுடியுமாயினும் அடிக்கடி அது பயங்கர உருவெடுத்து பயங்கர குரைத்தல் போன்ற இருமலை ஏற்படுத்தும். இது உண்மையிலேயே 'வைத்தியரை நாடிப்போ' என்று சொல்லும் ஒரு கட்டளை எனலாம். வைத்தியரை நாடி எக்ஸ்-கதிர் பரிசோதனை, சுவாசப்பைத் தொழிற்பாட்டுப் பரிசோதனை உட்பட பூரணமாக சுவாசம் சம்பந்தப்பட்ட பரிசோதனையைச் செய்துகொள்ளுங்கள். நோய் முற்ற முதல் இவற்றைச் செய்யவேண்டியது அவசியம்.

இவ்வாறு அவசரப்படுத்துவதற்குரிய காரணங்களை மீட்டுப்பார்ப்பது சந்தோஷத்திற்குரிய விடயமல்ல. மிகப் பிரமாண்டமான சர்வகலாசாலை வைத்தியப்பிரிவிலுள்ள சத்திரசிகிச்சைக் கூடத்திலுள்ள 45 வயதுப் பெண்ணின் இறந்த உடல், அப்பெண்ணுவள் புகைத்தலின் போது ஏற்பட்ட இருமலை பொருட்படுத்தாமல்விட்டதினால் ஏற்பட்ட பயங்கரமான விளைவைக்காட்டுகின்றது. அப்பெண்ணிற்கு இது சாதாரண காலை நிகழ்ச்சியாகத் தொடங்கி, பின் கூடிச்சென்று நிரந்தர நிலையை அடைந்தது. அப்போது ஒருநாள் அப்பெண்ணின் சளியிலிருந்த சிறிதளவு இரத்தம், இடது நுரையீரலில் புற்றுநோய் என்ற அந்தப் பயங்கரக்கண்டுபிடிப்பை ஏற்படுத்தியது. அத்துடன் அந்தப் பயங்கரமான இடது நுரையீரல் அகற்றும் சத்திர சிகிச்சையும் நிறைவேற்றப்பட்டது. அப்போதுதான் இன்னொரு புதிரும் புலப்பட்டது. அதாவது நுரையீரல் புற்றுநோயானது இரத்த ஓட்டத்துடன் கலந்து அப்பெண்ணை மரணத்தின் அணிவகுப்பில் இறுதிக்கட்டத்தில் சேர்த்துவிட்டது என்பதாகும். இந்த இளம்பெண் தனது உடலை வைத்திய ஆராய்ச்சிக்காக எடுக்கும்படி விட்டுச் சென்றார்.

## நுரையீரல் சிதைவு

புகைப்பவர்களின் இருமல் நுரையீரல் சிதைவை ஏற்படுத்துகின்றது என வெளிப்படையாகக் கூறலாம். இறுதியில் குருகிச்சுற்றோட்டமானது அழுத்தப்படுதலின் மூலம் தடைப்படலாம். அதாவது அங்கு உண்டாகிய சளியும் அழுத்தத்தை ஏற்படுத்தலாம். உள்ளிழுக்கப்பட்ட சிகரட் புகையில் புற்றுநோயை உண்டாக்கும் பொருட்களுடன் இரு ஆவிப்பறப்புள்ள வாயுக்களாகிய நைதரசன் இரு ஒட்சைட்டும், ஐதரசன் சயனைட்டும் உண்டு. நுரையீரல் திசுக்களுக்குப் பெரும் அழிவை உண்டாக்கும் இவ்வாயுக்கள் முதலாவது உலக மகாயுத்தத்தில் பாவிக்கப்பட்ட நச்சு வாயுக்களின் பிரதான கூறுகளாக இருந்தன.

நைதரசன் ஈர் ஒட்சைட்டு சிகரட் புகையில் 250க்கு ஒரு கோடி என்ற செறிவில் உண்டு. ஆனால் இச்செறிவு ஒரு தொழிற்சாலைப் பாதுகாப்புச் செறிவாகிய 5க்கு ஒரு கோடி என்ற செறிவுடன் ஒப்பிடும் போது எவ்வளவு கூடுதலாக

## விழித்துக்கொண்டால் தப்பலாம்

இருக்கிறது என்பதைக் கவனிக்கவும் [சில இரசாயனத் தொழிற்சாலைகளில் சில பதார்த்தங்கள் தயாரிக்கப்படும் போது சில நச்சு வாயுக்கள் வெளியேறலாம். இவ் வாயுக்கள் அவ்விடத்திலுள்ள தொழிலாளர்களையும், மக்களையும் பாதிக்காதவாறு ஒரு விதியை வகுத்திருக்கிறார்கள். உதாரணமாக; நச்சு வாயுவாகிய நைதரசனீரொட்சைட்டுக்கு பாதுகாப்புச் செறிவு 1 கோடி ஆகும். அதாவது 1 கோடி பகுதி காற்றில் 5 பகுதி நைதரசனீரொட்சைட்டுக்கு மேல் இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் காற்றில் நச்சுத்தன்மை ஏற்பட்டு மக்களைப் பாதிக்கும்.] சில பரிசோதனைவிலங்குகளில் 5 பகுதிக்கு மேற்பட்ட செறிவைக் கொண்டு பரிசோதனை நடாத்தியபொழுது இது அவ்விலங்குகளின் நுரையீரற் சிற்றறைகளைப் போர்த்துள்ள கல மென்சவ்வுகளை அரிக்கக்காணப்பட்டது. நுரையீரல் சிற்றறைகள் எனப்படுவது நுரையீரலில் உள்ள சிறிய காற்றறைகள் ஆகும். இவற்றிலிருந்துதான் குருதியானது, புதிதாக உள்ளிழுக்கப்பட்ட ஒட்சிசனை (பிராணவாயு) குருதி மயிர்ச்சிறு குழாய்கள் மூலம் பெறுகிறது. அதாவது சுவாசப்பையினுள் ஒட்சிசன் உறிஞ்சும் பரப்பைக் கூட்டுவதற்காக நுரையீரல் சிற்றறைகளில் உள்ள மென்சவ்வுச் சுவர்களில் பிரதான குருதிக் கலனானது வலை வேலைப்பாடுள்ள குருதி மயிர்ச்சிறு குழாய்களாகப் பிரிந்து பரந்துள்ளது. இதே குழாய்களின் மூலமாகவே காபனீரொட்சைட்டும் (கரியமில வாயு) வெளிச்சுவாசத்தின் போது வெளியேற்றப்படுகின்றது.

ஒரு தனிச் சிகரட்புகையில் இருந்து வெளிவரும் நைதரசன் ஈர் ஒட்சைட்டு, ஒரு நைலோன் காலுறையை எரித்து ஓட்டையாக்கக் கூடியளவு செறிவுடைய அமிலக் கரைசலை உண்டாக்கக்கூடியது. நுரையீரற் சிதைவை ஏற்படுத்தும் பல காரணங்களில் இந்த வாயுவும் ஒரு காரணி என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இச்சிதைவின் போது நுரையீரலில் கூட்டங்களாக உள்ள சிற்றறைகள் படிப்படியாக அழிந்து விடுகின்றன.

ஒவ்வொரு சிகரட் புகைத்தலுக்கும் இடைப்பட்ட நேரத்தில் நுரையீரலில் சில பொறிமுறைகள் நடைபெறுகின்றன. நுரையீரலிலுள்ள உடல் நொதியங்களால் அங்குள்ள நச்சுப்புகைகள் பிரித்தழிக்கப்பட்டு நச்சகற்றப் படுகின்றது. அத்துடன் நுரையீரல் மேலணியிலுள்ள பிசிர்க் கலகங்களின் அடிப்பினால் நச்சுப் பொருட்கள் சில வெளியே அகற்றப்படுகின்றது. எனினும் கடுமையாகப் புகைப்பவர்களிடத்தில் மேற்கூறிய இடைப்பட்டநேரம்மிகவும்சிறிதாகையால், நுரையீரலில் முழு நஞ்சையும் அச்சிறிதுநேரத்தில் அகற்றமுடியாதிருக்கின்றது. இந்நேரம் ஒன்றுதான் அழிந்த திசுக்கள் மீண்டும் சீரமைக்கப்பட நுரையீரலுக்கு கிடைக்கும் ஒரு சிறு அவகாசமாகும். நியூ ஓலியன்சில் உள்ள ஒக்செஸ்னர் கிளினிக் நுரையீரல் வருத்தங்களுக்குரிய அதிகாரி டாக்டர் ஹக்ஸ் பீ. ஹாச் என்பவர் பின்வருமாறு அழுத்தமாக எடுத்துரைக்கின்றார். அதாவது யாராவது ஒவ்வொரு நாளும் ஒழுங்காக இரண்டு பைக்கற் சிகரட்டிற்கு மேல் புகைப்பவர்களாயின் அவர்கள் இறுதியில் தொடர்ந்தும் புகைப்பின் மரணத்தை இலகுவில் தழுவிக்கொள்வார்கள்.

## மரணம் விளைவிக்கும் வாயு

அடுத்ததாக ஐதரசன் சயனைட்டே முதலாவது மகா யுத்தத்தில் பாவிக்கப்பட்ட மிகவும் கொடூரமான மரணத்தை விளைவிக்கும் வாயுவாகும். இதன் தொழிற்சாலைப் பாதுகாப்புச் செறிவு 10-க்கு 1 கோடி என்பதாகும். இது சிகரட் புகையில் மேற்கூறிய செறிவிலும் பல மடங்கு காணப்பட்டாலும் சுவாசத்தொகுதிக்கு ஏற்படும் பெரும் பாதிப்பு பின்வரும் இரு வழிகளால் குறைக்கப்படுகின்றது. ஒன்று சிகரட்டுப் புகை காற்றினால் ஐதாக்கப்படுதல், மற்றது மூச்சுக் குழாயைப் போர்த்துள்ள மேலணியில் உள்ள பிசிர்க் கலங்களால் விரைவாக மூச்சுக் குழற் தொகுதி சுத்தப்படுத்தப்படல் என்பனவாகும். நெடுகலும் பிசிரடிப்பை மேற்கொண்டு துப்புரவாக்கும் தொழிலைச்செய்யும். பிசிர்க் கலங்கள் அழுக்குள்ள சளியை மூச்சுக்குழற் கவரில் இருந்து மூச்சுக்குழற்தொடுவை வழியாகத் தொண்டைக்குட் செலுத்துகின்றது. அங்கு அது ஒன்றில் விழுங்கப்படுகின்றது அல்லது வெளியில் துப்பப்படுகின்றது. இந்தப் பிரதானமான பிசிரடிப்புச் சுத்தமாக்கும் முறை தடைப்படும்போது நச்சுப்புகைத் துகள்கள் சிறிய மூச்சுக்குழற் சிலைக் குழாய்களில் படிவதனால் அவற்றை அகற்ற ஆழமான பலமான இருமல் அடிக்கடி உண்டாகின்றது.

## தட்டிக் கழித்தால்!

இது ஒரு நல்ல நேரம். இப்போதாவது புகைத்தலை ஒழியுங்கள். இந்நிலையில் உங்கள் நுரையீரலில் ஏற்பட்டிருக்கும் எப்படிப்பட்ட சிதைவுகளும் அப்பாற் செல்லாமல் தடைப்படலாம். புற்றுநோயை விளைவிக்கக்கூடிய வகையில் ஏற்பட்ட கலச் சிதைவுகள் உண்மையிலேயே மாறலாம். ஆனால் அந்த நிரந்தரமான சிகரற் இருமலை தட்டிக்கழித்தீர்களானால் நீங்கள் கட்டாயமாக விரைவில் பயங்கர நோயாளியாகி மோசமான நிலையை அடைவீர்கள்.

தீவிரமாகப் புகைபிடிப்பவர்களின் நுரையீரலில் உள்ள பிசிர்க்கலன்கள் இந்நிலையில் அழிந்துவிடும். சிகரட் புகையில் உள்ள தாரும் (Tars) ஆவிப் பறப்புள்ள படிவுகளும், பாதுகாக்கப்படாத நுரையீரல் மேற்பரப்புகளிற் படிந்து நேரடியாக அக்கலங்களைத் தாக்குகின்றன. இந்தக் கலங்களின் கருக்கள்சேதப்படுத்தப்பட்டு ஒழுங்கற்றமுறையில் சிராழிதல், பூர்வ இடத்தில் புற்றுநோய் எனப்படும். இது தான் நுரையீரல்புற்றுநோயின் முதல் நிலை. இப்புற்றுநோய் 1976-ல் 84,000 அமெரிக்க மக்களைக் கொன்றது.

ஆதலால் இந்தக்கட்டத்தில் அந்த சிகரட் இருமல் பயங்கரமான இறுதி எச்சரிக்கையை விடுக்கின்றது. இசசநேரத்தில் நுரையீரற் புற்றுநோயானது எக்ஸ் கதிர்மூலம் பரிசோதித்துக் கண்டுபிடிக்கக்கூடியளவிற்கு தனது அளவில் பெரிதாகிவிடுகிறது. சாதாரணமாக இக்கட்டம் சத்திரசிகிச்சை மூலம் சிகிச்சையளிக்கக்கூடிய கட்டத்தையும் தாண்டிவிடுகிறது. புற்றுநோய்க் கலங்கள் இந்நிலையில் இரத்தஓட்டத்தை அடைந்துவிடுகின்றது. இந்த நிலையில் நூற்றுக்கு எட்டுவீதமானவர்கள்தான் தப்புவார்களெனினும் அப்படித் தப்புபவர்கள்கூட கடைசி ஐந்தவருடம்தான் உயிர்வாழ்வார்கள்.

ஓரளவாவது நோயைத்தடுக்கக்கூடிய இந்தக்கட்டத்தில் கூட இந்நோயின் பொதுவான ஒரேயொரு குணங்குறி இருமல் ஆகும். ஆனால் இது ஆச்சரியத்திற்குரியதுடன் துக்ககரமானதும்கூட. எத்தனை புகைபிடிப்பவர்கள் அந்த நச்சரிக்கும் இருமலை அதுவேறு ஏதோவென்று மறுத்துரைத்து அதற்கு முக்கிய கவனம்கொடுக்காமல்விடுகிறார்கள். இது தன்னைத்தான் ஏமாற்றும் ஒரு பயங்கரப்போராட்டம் ஆகும். நோய் கடுமையாகும்போது இருமலும் கூடும். அப்போது ஏற்படும் பயங்கர இருமலால் உட்காயங்கள், இருதயத்தாக்குதல்கள், மரணம் சம்பவிக்கக் கூடிய தாக்கங்கள்கூட ஏற்படலாம். அத்துடன் நுரையீரலை சீர்குலையச்செய்து சிக்கல்களையும் ஏற்படுத்தும்.


## அதிர்ச்சிக்குரிய கதைகள்

கடுமையாகப் புகைப்பவரின் நுரையீரலை உட்புறம் நோக்கினால் சிகரட் இருமல் சொல்லத் தெண்டிக்கும் அதிர்ச்சிக்குரிய கதைகள் புலப்படும். ஆனால் அந்த உள்ளேஉள்ள கதைகளை நோய்க்கூற்று ஆய்வாளரால் மாத்திரமே பார்த்து வாசிக்க முடியும்.

நுரையீரலானது கடுமையாகப் பாதிக்கப்பட்டால் அது

(9-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலக்கட்டுரை மொழியாக்கம்: **கே. செந்தில்நாதன்**



இலங்கை ஆசிரியர் சங்கம் கடந்த முதலாம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்திய மகாநாட்டின் இரவு கலைநிகழ்ச்சிகளில் இடம்பெற்ற யாழ். கலாஷேத்திர நாட்டியாலய கீதாஞ்சலி வி கே. நல்லையாவின் மாணவன் செல்வன் க. ராதாகிருஷ்ணனின் சிவத்தாண்டவத் தோற்றம்,

# ஆசை வயப்பட்டு அல்லலுறும் இருள்

## பாதைக்கு ஒளி விளக்குகள்

### ஓங்கு சினம் காக்க! ஆணவப் பேய் வெறி பிடியாதிருக்க!

ஆசைவசப்பட்டு அல்லலுறும் மானிடர்களை ஈடேற்றுவதற்காக அரும்பெரும் தவமுனிவர்கள் காலத்துக்குக் காலம் அவதரித்து காலத்துக்கும் இடத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் தகப் பல பல போதனைகளைப் போதித்தச் சென்றனர் சைவ சமயாசிரியர்கள், புத்தபகவான், கிறிஸ்துநாதர், முகம்மதுநபி, ஆதிசங்கரர், ஸ்ரீ கிருஷ்ண பகவான் போன்ற மகான்கள் போதித்த போதனைகளே இன்று உலகிலுள்ளவர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றன. பஞ்சமாபாதகங்களாகிய கொலை, களவு, கள், காமம் பொய் என்பவற்றைக் கடிய வேண்டுமென்று கூருத பெரியோர்கள் இல்லையெனலாம். இவ் வைந்தினையும் அறவே விலக்குவதை புத்த சமயம் விதந்தோதும்.

திரிகரணசுத்தி பெற்றவனே பூரண மனிதனாவதற்கு அருகதையாகின்றனன். அவனது இதயத்தில் இறையருள் இடையருது பிரகாசித்துக் கொண்டிருக்கும். ஏனையோரின் திரிகரணசுத்தி எவ்வளவுக்கிருக்கிறதோ அதற்குத் தகவே அவர்கள் அவனருளைப் பெறுவர் மேலே கூறிய பஞ்சசீலங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவோர் உண்மையாக நன்நெறியில் செல்கின்றனர். மக்களாகப் பிறந்தோர் உய்வடையவேண்டின், இவ்வைந்து சீலங்களையும் கடைப்பிடித்தொழுகுதல் அவசியம். இவை சமூக வாழ்வினைச் சிரமைக்க சாதகமாக அமைவன. ஒருவன் பொய் கூருமல் வாழமுடியும். கையால் களவு செய்யாது வாழமுடியும். கொலையைத் தவிர்த்தும், கள்ளை நீக்கியும், பிறர் மனை இச்சிக்காதும் நீண்டாமலும் வாழலாம். இவையெல்லாம் காயத்தாலும் வாக்கினுலும் அநுட்டிக்கத் தக்க சீலங்கள்ஆயின் எத்தனை மனிதர் தம் மனத்திருல் இவற்றைக் கடைப்பிடிக்கத் தக்கவர்? மிகச்சிலரே என்க. மாநிலம் போற்றும் மகாத்மா காந்தியே தன்னால் சினத்தை அடக்கமுடியவில்லையென்று பலமுறை கூறியிருக்கிருர். காமவாசையை அடக்க அவர் பட்ட கஷ்டம் யாவர்க்கும் தெரிந்ததே. ஏறக்குறைய இருபது வருடங்களாக தென்னுபிரிக்காவிலிருந்து பிரமச்சாரிய வாழ்வினை மிக விழிப்பாக வாழ்ந்து கடைப்பிடித்த அவர் பம்பாய் திரும்பிய போது ஒருமுறை பால்ய நினைவு எழுச்சியால் காமத் தீக்காளாரென அவரே கூறியிருக்கிருர். அருட்பாடல்கள் பல பாடிய திருவருட்செல்வர்களின் கூற்றுக்களைக் கவனியுங்கள். 'எத்தனை புத்தி சொன்னுலும் இழிந்த மனமே நீ பிறந்த இடத்தையே நாடுகின்ருய்' என மனம் நொந்தார் பட்டினத்தடிகள். 'கூர்வாள்கண்ணியர்கொடுமையில் படாது கூர்ந்தருள் செய்வாய் அருணசலா!' என வேண்டுதல் செய்வார் ரமண மகிரிஷி. ஆகவே திரிகரணங்களுக்குள் மனத்துக்கண் மாசிலாது வாழ்தல் மட்டுமே உண்மை நெறியாகும். அதுவே தவமாகும். மற்றிரண்டும் இந்நெறிக்கு அரண்செய்து நிற்பன. இந்த மனத்தினுள் மிகச் சூக்குமமாக இயங்கி மனிதனை மயக்கும் காமம் குரோதம், உலோபம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறினத்தையும் ஒழித்து மனம் காடுபற்ருது காப்பதே ஆறு சீலங்களாகும்.

இவ்வாறு (உள்ளத்தின் கண் நிகழ்வதனுல் உட்பகை என்பர்) இப்பகையை வெற்றி கொள்பவனே மாவீரன். இதனலன்றே கம்பநாடரும்,

> வெள்ள நீருஞ்கினில்
> விண்ணிருகரில்
> தள்ளரும் பகையெலாம்
> தவிர்த்து நின்ற யான்
> கள்ளரில் கரந்துறை
> காமமாதியாம்
> உள்ளுறை பகைஞருக்
> கொதுங்கி வாழ்வேனே.

என்று, புறப்பகையெலாம் ஒழித்து நாட்டினைக் காத்த கசரதன் அதன்மேல் தன் உயிர்க்குறுதி பயக்கும் தவத்தினை மேற்கொள்ளத் துணிந்தலை, நயம்படக் கூறியுள்ளார்.

''என் நாட்டுக்கு வெளியே வெளிப்படையாய் வாழ்ந்த பெருஞ் சேனுபலப் படைத்திருந்த மாற்றரசரான பல புறப்பகைவரை அஞ்சி ஒதுங்காமல் எதிர்த்து வெற்றி பெற்றிருக்கின்ற யான் என் நாட்டுக்குள்ளே மறைந்து வாழ்கின்ற சிறு கூட்டபலமேயுள்ள சில திருடர்போல, என்னகத்துள்ளே மறைந்து வாழ்கின்ற காமகுரோத உலோபமோக மத மாற்சரியங்களான சில உட்பகைவருக்கு அஞ்சி ஒதுங்கியிருந்து உயிர் வாழ்வேனே? வாழேன்'' என்பதே இப்பாவின் பொருளாகும்.

புலனேந்திரியங்கள் தங்கள் சேட்டைகளைச் செய்யாது வாக்காலும் செயலாலும் தடுத்து நிறுத்தலாம். சிறைச்சாலையில் இருப்பவனுக்கு இந்திரியார்த்தங்களைப் பார்க்கவும் கேட்கவும் நுகரவும் முடியாது. அவன் பலவந்தமாகத் தனித்தொதுக்கி விலக்கி வைக்கப்பட்டிருக்கிருன். ஆனுலும், அவைகளை அநுபவிக்க வேண்டுமென்ற ஆசை அவன் மனதில் உதித்துக்கொண்டே இருக்கிறது. இதை வேறெவரும் அடக்கி ஒடுக்கி அது சித்திப்பதன்று. புலனடக்கம் முதலிய தபசுகளைச் செய்பவனது நிலைமையும் இத்தகையதே.

பழைய வாசனைகள் மிகச் சூட்சுமமாக இருந்து கூத்தாடும். இவ்வாசனைகளைத் தலைமாகிய தீயிலே இட்டு வறுக்க வேண்டும். இதனைத்தான் சுடச்சுடரும் பொன்போல ஒளிவிடும் என்றனர். இந்திரிய வயம்மயங்காத மனிதனே மேலோன் ஆகின்ருன். மனிதனின் அல்லது சமூகத்தின் பண்பாடு அவ்வவரிடத்துக் காணப்படும் புலனடக்கமே யாகும். மனம்போன போக்கெல்லாம் போதல் மாண்புடைமையாகாது.

இதன் விருத்தி முறையையும் காரணங்களையும் கவனிப்போம்.

தன் விருப்பப்படி எண்ணிக்கொண்டு சாதாரண மனிதன் வீதி ஒன்றில் செல்கின்ருன். ஆங்கு பல காட்சிகளைக் காண்கிருன், கண்ணுடியில் தோன்றி மறையும் காட்சிகளைப் போன்று அவன் மனதில் அக்காட்சிகள் தோன்றித் தோன்றி மலைந்துகொண்டிருக்கின்றன. அவற்றின் மத்தியில் ஒரு கட்டழகுள்ள வடிவம் தோன்றுகிறது. அதைக் கூர்ந்து பார்க்க மனம் விரும்புகிறது. திரும்பவும் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் எழுகிறது. பலமுறை பார்க்கிருன் அதைப்பார்ப்பதிலும் பின் நினைப்பதிலும் மகிழ்வு உண்டாகிறது நினைத்து நினைத்து அவ்வெழில் ரூபத்தில் விருப்பம் வளர்கிறது. விருப்பம் தடித்து வளர்கலே பற்று எனப்படும். பார்த்தல் என்ற ஓர் இந்திரிய நிகழ்ச்சி ஏனைய இந்திரிய நிகழ்ச்சிகளுக்கும் இடம் தேடிவிடுகிறது. அவ்வடிவத்தைத் தனதாக்கிக்கொள்ளத் தீர்மானித்து விடுகிருன் அவன். இத்திர்மானமே காமம் அல்லது ஆசை எனப்படும். எரிந்து கொண்டிருக்கும் தீயில் ஊற்றிவிடும் எண்ணெய் போன்று சிந்தனைகள் காமத்தை வளர்க்கின்றன. கமேத்தீயால் மனிதன் தீய்க்கப்படுகின்ருன். இத்தீயினை வளர்க்காது எண்ணங்களைப் பொருள்களிடத்துப் பற்றவிடாது பார்ப்பதெல்லாம் சிவருபகமாகப் பார்த்துப் பழகுதல் வேண்டும், இதுவே காமமின்மையாகும்.

#### ஓங்கு சினம்காக்க

இவ்வாறு ஒருவன் தனது ஆசைகளைப் பூர்த்திசெய்ய எத்தனிக்கும் போது உலகம் அதற்கு முட்டுக்கட்டையாக நிற்கும். அப்போது ஆசை தடைப்படுகின்றது. தடைப்படுத்தப்பட்ட ஆசை சினமாக வடிவெடுக்கிறது. இது குரோதம் எனப்படுகின்றது. சினம், பைத்தியத்துச்குச் சமமானது. சினம் தற்காலிகமாகவுள்ளது. பைத்தியம் நிலைத்துவிடுவது. இவ்வளவு தான் இவற்றின் வேறுபாடு. இத்தீய குணத்தினை அகற்ற வேண்டும். இதனலன்றே ஒளவைப்பிராட்டியாரும் 'உள்ளங் கவர்ந்தெழு தோங்கு சினம் காத்துக்கொள்ளும் குணமே குணமென்க' என்ருர்.

காமம், வெகுளி (கோபம்) மயக்கம் என்னும் இவை மூன்றினையும் வென்றவனுக்கு எவ்வித நோயும் இல்லை என்பதும், சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும் ஏமப்புணையைச் சுடுமென்பதும் பொய்யாமொழியன்ருே. ஆகவே கோபமின்மையே இரண்டாவதாக அமைய வேண்டிய நல்லொழுக்கமாகும்.

கோபத்தின் விளைவு மனக்குழப்பம். காற்றடித்து அலைகள் எழாத கடலின் அடித்தரை நன்ருகத் தெரியும். அலையெழுந்து கொந்தளிக்கும் கடல் எல்லாம் ஒரே அமளியாகவிருக்கும். ஆழமான இடமும் தெரிவதில்லை. ஆழம் குறைந்த இடமும் தெரிவதில்லை. கற்பாறைகளுள்ள இடமும் மணற்பாங்கான இடமும் ஒரு மாதிரித்தான் தோன்றும். சினத்தினுல் மனக்குழப்பம் அடைந்த மனிதனுக்கு நன்று இது, தீது இது என்ற நினைவு இருப்பதில்லை. தன்னனுபவத்தாலும் பெரியோர் வாக்குகளாலும் பெற்ற நல்லறிவு யாவும் ஞாபகத்திலிருந்து விலகிவிடும். மறதியினுல் விவேகம் அழிகிறது; ஆன்ம நாசம் உண்டாகிறது.

வாழ்க்கையில் சீவராசிகளுக்குச் சகல தேவைகளும் இறைவனுல் படைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைவரை இவ்வுலகினை ஓப்பி ஒப்பிய இறைவன் இனி எங்களைக் கைவிட்டு விடுவாரா? இல்லை, இல்லை பேய் மனம் பித்தலாட்டங்கொண்டு தன் தேவைக்கு மேலதிகமாகப் பொருள்களைத் திரட்டுகின்றது. எவ்விதமாயினும் பொருளைத்தேடி வைக்கப் பார்க்கிறது. இந்த நினைவு கூடுதலாகப் பதியப்பதிய அளவுக்திகமாகத் தேடுவதோடு மட்டும் நில்லாமல், தேவைப்பட்டு அதனுல் கஷ்டமுறும் மக்களுக்கு ஈயாமலும் இருக்கப்பழகிக்கொள்கின்றது. தான் இன்பத்தைப் பெறுவதற்கு மற்றவர்களுக்குத் துன்பம் இழைக்கவும் முற்படுகின்றது.

இவ்வீயாமையே ஈனச்செய்கையாவுள்ளும் கடைப்பட்ட ஈனச்செய்கையாகும். இதனலன்றே இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் என்றும் கூறுவர். காமமின்மை கோபமின்மை ஆகியவைகளோடு அடுத்ததாகச் சிறந்த குணம் யாதெனில் உலோபமின்மையாகும்.

கோபம் வந்தவன் மனம் அமைதியுருதாகையால் அவனுக்கு மனக்குழப்பம் உண்டாகிறது என்றும் மனக்குழப்பத்திலிருந்து ஞாபகமின்மையும் ஞாபகமின்மையிலிருந்து புத்தி நாசமும் உண்டாகிறதென்பதையும் அறிந்தோம். இப்புத்தி நாசமே யோகமாக மாற்றுப் பெறும். இம்மோகத்திருல் ஒருவன் நித்தியாநித்ய வஸ்து விவேகமின்றித் தவருன நெறியில் செல்கிருன். இவனுல் ஆத்ம தியானம் செய்யமுடியாது. ஆன்ம தியானம் செய்யாதவனுக்கு ஆன்ம சொருப ஞானமில்லை. ஆதலினுல் முன் கூறிய மூன்று சீலங்களுடனே இந்த மோகமின்மையாம் சீலத்தையும் நான்காவதாகக் கடைப்பிடிக்க வேண்டியது ஒவ்வொரு சாதகனதும் கடமையாகும்.

#### ஆணவமதப் பேய்

ஆணவச்செருக்குஅறியாமையால் உண்டாகின்றது. 'நான்' என்றும் அகம்பாவமே நாம் அடையும் துன்பங்கள் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகும். இச்செருக்கினையே மதம் என்பர். இதனை ஒழிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தவே ''மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்'' என்ற இராமலிங்க சுவாமிகளும் பாடியுள்ளார். மோகத்தால் எழுவதே மதம் பேய் வெறி. அதனுல் அந்த வகை மதமின்மை மிகமிகச் சிறந்த நல்லொழுக்கமாகும். இதுவே ஐந்தாவதாகும்.

(9-ம் பக்கம் பார்க்க)


தெய்வ அனுக்கிரகம் பூரண சுகம்

மாருத நோய்களை மாற்றிவைக்கிருர். தீராத பிணிகளையும் தீர்த்துவைக்கிருர்



ஆஸ்த்மா. பீனிசம், மூலவியாதி கொடிய வியாதி தான். ஆனலும் நெடுக அதற்கு அடிமையாகத்தான் வேண்டுமா? வள்ளிமலை மூலிகை மருந்துகளை பாவித்தோர் பலர் குணமடைந்துள்ளனர்.

மாதர்களே! வயிறுப்பொருமலா? முகத்தில் சுருக்கம் விழுகிறதா? மாதவிடாய் கோளாறு? வெள்ளை படுகிறதா? பித்தச்சூடா? கைகால் எரிவா? நாரி உளைகிறதா? முடி நரைக்கிறதா, ஒரு தடவை வள்ளிமலை மூலிகைகளை பாவித்துப்பாருங்கள். சுகம் தெரியும்.

வாலிபரே! தவருன பழக்கங்களாலும், கூடாத சகவாசத்தாலும் வாழ்வை பாழாக்கிவிட்டோமே என்ற கவலையை விட்டுத்தள்ளுங்கள். எந்த ரகசியவருத்தமானுலும் எழுதுங்கள். விஷயத்தை பரம ரகசியமாய் வைத்து குணமாக்கித் தருகிருேம்.

திருமணவாழ்வு சோபிக்கவில்லையா? வேண்டிய சுகத்தை அனுபவிக்கமுடியவில்லையா? வீரிய சக்தியை மீட்டுத்தரும் மூலிகை மருந்துகள் உண்டு உட்கொண்டதும் வீரிய உணர்வை அறிவீர்கள். உங்கள் மனைவியையும் திருப்திப்படுத்துவீர்கள்.

நாற்பது வயதாகிவிட்டதால் வீரியக்குறைவு தலைகாட்டலாம். அதனைக்கண்டு துவண்டுவிடாதீர்கள். எழுதுங்கள். பயன்பெறுங்கள்.

தேமல், மஞ்சட்காமாலை, இடையிட்டுவரும் செவிட்டுத்தன்மை, வாதரோக பீடை, கெற்பக் கோளாறுகள் முதலான சகல பிணிகளுக்கும் சிகிச்சை உண்டு.

வசியம்! வசியம்!

வியாபாரம் விருத்தியாக, பதவிஉயர்வு தேடிவர, நினைத்தகாரியம் கைகூட வேளாண்மை பெருக, காதலில் வெற்றிபெற பரீட்சையில் சித்திபெற பகைவனை வெல்ல, கல்வியில் ஊக்கம் காட்டக்கூடிய வசியங்களும், சாந்தியும் செய்துதரப்படும்.

யுவதிகளே! 26 வயதாகியும் ஏதாவது தோஷத்தால் திருமணம் தடைப்பட்டிருந்தால் அல்லது பேசிய திருமணம் தடைப்படுமானுலும் எழுதுங்கள். குறையை நீக்கி உங்கள் வாழ்வை ஒளிமயமாக்குவோம்.

வள்ளிமலை மூலிகைச் சித்தர் தரும் சுகமே சுகம்!

ஸ்ரீபால சுப்பிரமணிய சுவாமி,

745, ஸ்ரீமாவோ பண்டாரநாயகா மாவத்தை, (ஸெயின்ஸ்தான் தியேட்டருக்கு சமீபமாக)
கிருன்பாஸ் போஸ்ட், கொழும்பு-14.

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த
ஜெயேந்திரா மூவிஸ்
காத்திருப்பேன் உனக்காக

ராணி (யாழ்ப்பாணம்)
74-வது நாள்
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்) போன்: 7180
71-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

REGAL (JAFFNA)
Daily: at 4-45, 7-00 & 9-30 p.m. only
ROBERT LOUIS STEVENSON'S CLASSIC
TREASURE IsLAND
(Color)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன்-சௌகார்ஜானகி
ஆலயம்
வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர் — லதா நடித்த
உழைக்கும் கரங்கள்

RIO (Jaffna)
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
Now Showing
Sex Comedy
CHASTITY BELT
(கற்புக் கவசம்)
(Adults Only)

வெலிங்டன் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ (யாழ். நகர்) போன்: 7693
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா முத்துராமன் - சகுந்தலா நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, ஜெமினி, சாவித்திரி
கப்பலோட்டிய தமிழன்
(புதிய பிரதி)

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாருடன் வாழ்ந்தாலும் எனக்குப் புருஷன் அவர்தான். உனக்கு அப்பா அவர்தான். இதை யாராலும் மாற்றமுடியாது. நான் அவர் நினைவிலேயே வாழ்ந்து-அவர் நினைவிலேயே உன்னையும் வளர்த்தேன்-என் இதயத்தின் தெய்வமான அவரையா நீ இப்படிப் பேசுகிருய்!''—என்ருள் தங்கம்மாள் கண்ணீரை உதிர்த்தவாறே.

சுப்பையர் குற்றவாளிபோல் தலைகுனிந்து நின்றிருந்தார். அவருக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. இளங்கோவுக்கு ஒன்றுமேபுரியவில்லை. துரோகம் செய்த கணவனையே தெய்வம் என்கின்ருள்; அம்மா மட்டுமல்ல, இந்தப் பெண்களே இப்படித்தான்! ஆண்கள் என்னதான் தவறு செய்தாலும் அவர்களை மன்னித்து மறந்துவிடும் பண்பு அவர்களிடமே உண்டு.

அதிலும் தமிழ்ப்பெண்கள் கணவனே கண்கண்ட தெய்வம் எனப் போற்றி வாழ்பவர்கள். அது அவர்களின் இரத்தத்தில் ஊறிய பண்பு! இந்தத் தமிழ் மண்ணின் மாண்பே அதுதானே! என்று எண்ணியவாறே வியந்து நின்ருன் இளங்கோ!

(யாவும் கற்பனை)

—

## ஆசை . . .

(8ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதனிடத்தே இடையருது எழும் ஆசையானது பொருமைக்கு ஏதுவாகின்றது. தான் சம்பாதித்ததிலும் கூடுதலாக இன்னெருவன் சம்பாதிக்கிருன் என்றதும் மாற்சரியம் (பொருமை) மனநிலையை விகாரப்படுத்திக் கொண்டு முளைகொள்கிறது. மாற்சரியம் அடைந்த ஒருவன் பஞ்சமா பாதகங்களும் செய்வதற்கு அஞ்சுவதில்லை. ஆகவே நல்லொழுக்க வாழ்வினை விரும்புகிறவர்கள், நன்னெறியைக் கடைப்பிடிப்பவர்கள் ஞானத்தை அடைய விரும்புவோர், திருவடி யாத்திரை செய்கிறவர்கள் ஆகிய எல்லோரும் காமமின்மை குரோதமின்மை உலோபமின்மை மோகமின்மை மதமின்மை மாற்சரியமின்மையாகிய ஆறு ஒழுக்கங்களையும் தவருது கைக்கொள்வார்களாக.

'காமாதி குணமாறும் கட்டவிழுமாகில்' பேரின்பம்தானே திலைத்துவிடும். வேட்டைப் புலையர் மேவாதவாறு மனக்காட்டைத் திருத்தி உய்வோமாக.

(வீரசைவ மகாகுரு சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களின் 75ம் ஆண்டு நிறைவு வைரவிழா நினைவு மலரில் வெள்ளவத்தை திரு சி. ஆறுமுகம் புனைந்தளித்தது. 'சிவ தொண்டன் மறுபிரசுரம்)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-மஞ்சுளா
அன்பே ஆருயிரே

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி நடித்த
ஹரிச்சந்திரா

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-லதா
வீட்டுக்கு வந்த மருமகள்

## குருமாற்றம் —

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

**சிங்கம்**

வெகுமானம், பெருலாபம், வெற்றி, கீர்த்தி முன்னேற்றம் கொடுக்கும். எண்ணிய எண்ணங்கள் சிறப்பாக நிறைவேறும். உல்லாசப் பிரயாணங்கள் கொடுக்கும். மிகவும் நன்று. திருப்தி சந்தோஷம் கொடுக்கும்.

**கன்னி**

தொழில்சிறப்பு, உத்தியோக உயர்வு வருவாய் மிகுதி நன்மாற்றம் தரும். நல்ல மதிப்பு அரசாங்கத்திஞல் கிட்டும்.

**துலாம்**

மிகவும் சிறப்பான பலனைத் தர குரு காத்திருக்கிருர். கடந்த காலத்தில் தடைப்பட்ட கருமங்கள் யாவும் சீராக்கப்பட்டு பல முன்னேற்றம், உயர்ச்சி, செல்வம் முதலியன தரும். பல பிரயாணம் தரும். கல்வி சிறக்கும்.

**விருச்சிகம்**

நஷ்டம், கஷ்டம், சுகயீனம் காட்டும். தடை, தாமதம் கவலை, சாக்கேள்விகள், மனச்சோர்வு, பணக்கஷ்டம், மனச் சஞ்சலம் இருதய உடைவு ஏற்படும்.

**தனு**

குடும்பச் சிறப்பு, முன்னேற்றம், விவாகம், எதிர்வர்க்க உறவு மிகும். ஆரோக்கியம் சிறக்கும் லாபம் தரும் கல்வியில் முன்னேற இடமளிக்கும்.

**மகரம்**

பெரும் மாற்றம், வெற்றி, சிறப்பு, மரியாதைகள் தரும். எதிர்பாராத வகையில் பல கஷ்டங்களைத் தாண்டி முன்னேறச் செய்யும். அரச சன்மானம், மக்கள் உறவு மிகும். ஆரோக்கியம் நன்றல்ல.

**கும்பம்**

மிகவும் சிறப்பான வெற்றிகள் உண்டுபண்ணும், பெரும் வெற்றிகளை அடைவீர்கள். இலாபம்காணும், ஆரோக்கியம் நன்ருக இருக்கும். பலவிதமான துறைகளிலும் வெற்றி பெற்று அரச சன்மானத்துடன் வாழ்வீர்கள். செல்வம் பெருக வழி வகைகள் தரும்.

**மீனம்**

பூமி லாபம் கல்வியால் சிறப்பு. உறவினரால் நல்ல செய்தி. வீடு கட்டப்பலன் தரும். அமைதி ஏற்படும். மாதா பிதாவுக்கு நற் பலன் தரும்.

## புகைப்பவர்க......

[17-ம் பக்கத் தொடர்ச்சி]

பருமனில் பருத்து அதன் சிறிய மூச்சுக்கிளைக்குழாய்கள் சிறிய காற்றறைகளினதும், மயிர்த்துளைக் குழாய்களினதும் அழிவிஞல் முற்ருக மூடப்படுகின்றது. அந்த நுரையீரலானது ஒரு புற்று நோயாளியினதாயிருந்தால் சாதாரண மனிதனின் நுரையீரலிலும் பார்க்க ஆறுமடங்கு பாரமுடையதாயிருப்பதுடன் அது மனிதனை உள்ளிருந்து ஆட்டிப் படைக்கும் மனப்பிரமையைப் போன்றிருக்கும்.

ஈஸ்ற் ஒறேஞ்சில் உள்ள பல அனுபவமுள்ள நிபுணர்கள் வேலைபார்க்கும் வைத்தியசாலையில் உள்ள புகழ்போன ஆய்வு கூடத்தில் டாக்டர் ஒஸ்கார் அவுர்பா என்பவரால் 23 வருடங்களுக்குமேல்செய்யப்பட்ட சொந்தப் பரிசோதனையில் புகைப்பவர்களின் நுரையீரல் கலங்களில் நடைபெறும் அமைப்பு மாற்றங்களை பாகுபடுத்தியுள்ளார். புகைத்தல் பழக்கத்தால் இறந்த 1340 மனிதரை பரிசோதித்த பொழுது அதில் 95.5 வீதமானவர்கள் ஒரு பெட்டியோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான சிகரட்டைப் புகைத்ததால் இறந்தவர்களாகக் காணப்பட்டார்கள். இதஞல் ஏற்பட்ட பாதிப்பு புகைத்தல் நடந்த நேரத்திலும் புகைக்கப்பட்ட சிகரட்டின் அளவிலும் தங்கியிருந்ததாக. கணக்கிடப்பட்டுள்ளது. ஒழுங்கான புகைபிடிக்கும் பழக்கம் அல்லாதவர்களுள் 95 வீதமானவர்களில் இவ்வருத்தம் மிகவும் அருமையாகவோ அல்லது முற்ருக இல்லாமலோ காணப்பட்டது.

நுரையீரல் புற்றுநோய்க் கலங்களைப்பற்றிதொடர்ந்தும் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் பயஞக மேலும் புலஞகிய து என்னவெனில் ஒருநாளைக்கு ஒரு பெட்டி சிகரட் குடிப்பவர்களும் மேற்கூறிய கல விகாரங்களுக்கு விதிவிலக்கல்ல என்பதுவும், கடுமையாகப் புகைபிடிப்பவர்களில் 85 வீதமானவர்கள் நுரையீரலில் வெடிப்புகளையும் பூர்வ இடத்தில் புற்றுநோயையும் கொண்டிருக்கலாம் என்பதுவுமாகும்.

சிகரட் புகைத்தலால் ஏற்படும் ஆபத்து இன்று எவ்வளவு பாரதூரமாக இருக்கின்றது? மறுமொழி மிகவும் கடுமையானதுதான். முன் எப்போதையும்விட சிறு காரணங்களுக்காக நாம் முன்னையதிலும் கூடுதலாகப் புகைக்கின்ருேம். இதஞல் இப்போது முன்னையதிலும்பார்க்க கூடுதலானவர்கள் புகைத்தலால் ஏற்படும் நோயிஞல் இறக்கின்ருர்கள்.

எவ்வளவு கூடுதலாக நாங்கள் இன்று புகைக்கின்ருேம்; 1974-ம் ஆண்டில் வீட்டுப் பாவனையாக மாத்திரம் 599 கோடானகோடி சிகரட்டுகள் புகைக்கப்பட்டன. இது 1975ல் 607 கோடாஞு கோடியாகக் கூடி இவ்வாண்டு நம்பமுடியாத முறையில் இன்னும்கூடியுள்ளது.

நுரையீரல் புற்றிஞல் இறந்தவர்களின் தொகை 1935-ல் 4000 ஆக இருந்து 1976-ல் 84,000 ஆக உயர்ந்துள்ளது. நிரந்தர மூச்சுக்குழல்கவரழற்சியாலும், வேறு காரணங்களாலும்உண்டாகும்இறப்பு 1935ல் 2700 ஆகவிருந்து 1976.ல் 53,000 ஆகவுயர்ந்துள்ளது. இருதய இரத்தக்கலன் நோய்களால் ஏற்படும் சாவு 1935-ல் 550,000 ல் இருந்து இன்று கிட்டத்தட்ட இரட்டிப்படைந்துள்ளது. புகைக்காதவர்களைவிட புகைப்பவர்களிடத்தில் இந்த சாவு விகிதம் இரட்டிப்பாகக் காணப்படுகின்றது. இந்த நிலை இப்பொழுது எங்கள் சமுதாயத்தில் ஒரு துர் அதிர்ஷ்டத்தை ஸ்தாபித்துவருகின்றது.

புகைபிடிப்பவர்களே! இன்னும்தான் உங்கள் மனேநிலையில் ஒரு மாற்றம் ஏற்படாவிட்டால் கடைசி உங்கள் அன்புக்குரியவர்களுக்காகவும், உங்களுக்காகவுமாவது பின்வரும் கூற்றைஞாபகத்தில் வைத்திருங்கள் காலையில்சாதாரணமாக ஏற்படும் அந்த அபசகுன இருமல் ஒரு பயங்கர ஆபத்தை குறித்து எச்சரிக்கை செய்யும் ஒலியாகும், அல்லது அது மரணத்தைக் குறிக்கும் இறுதிக்கட்டமாக இருந்து பல வேறு உள்ளங்களை மனமுடையச்செய்யும் ஏனெனில்எல்லாக் காரணங்களிலும் பார்க்கப் புகைப்பதால் ஏற்படும் மரணம் தான புள்ளி விபரவியலில் உச்சக்கட்டத்தையெடுத்துள்ளது.

['ரீடர்ஸ் டைஜஸ்ட்' ஃபார் ஈஸ்ட் நிறுவனத்தின் அனுமதியுடன் ரீடர்ஸ் டைஜஸ்ட் 1976 செப்டம்பர் இதழில் வெளியான இக்கட்டுரை இங்கு மொழியாக்கம் செய்து பிரசுரிக்கப்பட்டது.]

## வானொலி நாடகங்கள் எழுதுவது எப்படி?

வானொலி - மேடை நாடகங்கள் எழுதுவதில் தேர்ச்சியும், அனுபவமும் பெற்றவரான 'வரணியூரான்' அவர்கள் 'வானொலி நாடகங்கள் எழுதுவது எப்படி' என்ற தலைப்பில் 'ஈழநாடு' வார இதழில் கட்டுரைத் தொடர் ஒன்றை எழுதுகிருர். முதல் பகுதி அடுத்த வாரம் வாரமலரில் இடம்பெறும். (-ஆ-ர்)

வட. பௌத்த சங்கம் அறிவிப்பு

# எவருக்கும் எமது ஆதரவு இல்லை!

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட - இலங்கைப் பௌத்த சங்கம் எந்த ஒரு கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ; மறைமுகமாகவோ, நேரடியாகவோ ஆதரவு வழங்கவில்லை என்று மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. எஸ். எம். ஜே. சேனரத்ன ஓர் அறிக்கையில் கூறியுள்ளார். திரு. சேனரத்ன பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது;

''எங்கள் சங்கத்தின் சில அங்கத்தவர்கள் யாழ்ப்பாணத் தொகுதியில் சில வேட்பாளரை மறைமுகமாக ஆதரிப்பதாக வதந்திகள் பரவியிருக்கின்றன. யாழ்ப்பாணத்தொகுதியிலும் சரி அல்லது இலங்கையில் எந்தத் தொகுதியிலும் சரி எந்த வேட்பாளருக்கோ அல்லது அரசியல் கட்சிக்கோ மறைமுகமாகவோ, அல்லது நேர்முகமாகவோ எமதுசங்கம் ஒருவிதமான ஆதரவும் வழங்கவில்லையென்பதை பகிரங்கமாக அறிவிக்க விரும்புகிறேன்.

நிர்வாக சபையிலிருக்கும் சகல அங்கத்தவர்கட்கும் அரசியலில் சம்பந்தப்படவேண்டாமென்று நான் பகிரங்கமாகக் கூறியிருக்கிறேன்.

''எல்லா சமூகத்தவர்களுக்கும், பௌத்த போதனையைப் பரப்புதலும், பௌத்த சமூகத்துக்கு சமூக சேவை செய்தலும், உதவி செய்தலும் எங்கள் குறிக்கோள். அத்துடன் இச்சங்கத்தின் பிரதான குறிக்கோள் புத்த பகவானின் போதனையாகிய சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் எல்லா சமூகத்தவர்கட்கும் விஸ்தரிப்பதாகும்''

—

## உற்சவம்

வண்ணை சிவன் கோவில் தேவி உற்சவம் 7-ம் நாளாகிய இன்று பகல் 9 மணிக்கு அம்மன் பூஜையும் உள் வீதி வலமும் மாலை 6 முதல் முத்தமிழ் வித்தகி செல்வி நல்லபிள்ளை நாகமுத்துவின் ''சிவலிங்கசாட்சி'' பற்றிய சொற்பொழிவும் இரவு 7-30க்கு அம்பாள் பூஜையாகி நாகவாகனத்தில் சிவலிங்க பூஜைக் காட்சியுடன் வெளி வீதி வலம் வருதலும்.

# ''தமிழ் மக்களின் தீர்ப்பு என்ன என்பதே கேள்வி'

வேலணை, சனி

''சிங்கள அரசு பலவகையிலும் உரிமைகளைப் பறித்தது. பறித்துக் கொண்டும் வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் தமிழினம் ஒன்றுபட்டு எமது இழந்துபோன உரிமைகளுக்காகப் போராடவேண்டும். இன்று நாம் ஒன்றுபட்டு விட்டோம். இழந்த உரிமைகளைச் சுலபமாகப் பெற நாம் போராடவேண்டும்'' என்று தமிழ்க் காங்கிரஸ் பிரமுகரும், சட்டத்தரணியுமான, திரு. என். ரி. சிவஞானம் ஊர்காவற்றுறைத் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர், பண்டிதர் கா. பொ. இரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

வேலணை கிழக்கு விஜயரெத்தினம் வீதியிலுள்ள தாளிபுலம் என்னுமிடத்தில் திரு. ச. மாணிக்கவாசகர் ஆசிரியர் தலைமையில் இத்தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

மானிப்பாய் தமிழர் கூட்டணி வேட்பாளர் திரு. தர்மலிங்கம் கலந்துகொண்டு உரையாற்றுகையில்:

''இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் தமக்கென ஒரு நாட்டை அமைக்கப் போகின்ருர்கள் என்பதுதான் இன்றைய நிலைமை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏகமனதான தீர்மானத்திற்குத் தமிழ் மக்கள் தீர்வு என்ன என்பதைத்தான் உலகநாடுகள் எதிர்பார்த்து நிற்கின்றன. இத்தேர்தலைத் தமிழ் ஈழம் பெறுவதற்கான பொதுசன வாக்கெடுப்பாகக் கருதவேண்டும்'' என்ருர்.

காங்கேசன்துறை வேட்பாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில்:

''அடிமைப்பட்ட எந்த இனமும் சுதந்திரம் பெறுவதற்கு ஒன்றுபடவேண்டும். தமிழர் விடுதலைக்கூட்டணிக்குக் கிடைக்கும் வாக்குகளே தமிழ் ஈழத்தின் இலட்சியத்திற்குக் கிடைத்த வாக்குகளாகக் கணிக்கப்படும். மக்கள் அனைவரும்அமோகவாக்குகளை அளித்து கூட்டணியின் சார்பில் நிற்கும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களையே தெரிவு செய்யுங்கள்'' என்ருர்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில்:

''இன்றைய பொதுத்தேர்தலில், தமிழ் மக்கள் தமிழ் ஈழத்திற்கு வாக்களிப்பதா? இன்றேல் தமிழன் அடிமையாக வாழ்வதா என்பதை நிலைக்கச் செய்வதாகும்.

''தமிழர் கூட்டணிக்கு மாருக அளிக்கப்படும் வாக்குகள் அனைத்தும் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு அளிக்கப்படும் வாக்காகக் கருதப்படும். எனவேசுதந்திரத்தை விரும்பும் மக்கள் எல்லோரும் தமிழ் ஈழத்தைப் பெறுவதற்கு வாக்களிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை'' என்ருர்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. நா. பாலசுப்பிரமணியம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

## வேலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர், இதுபற்றி தாம்மேலிடத்துடன்தொடர்பு கொண்டு ஒரு முடிவுக்கு வருவதாகவும், இதற்கு ஒருநாள் அவகாசம் தரும்படியும் கேட்டுக்கொண்டார்.

ஆனுலும் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர ஊழியர்கள் விரும்பவில்லை. நாளை திங்கட்கிழமை தங்களின் கோரிக்கை நிறைவேருவிட்டால் இதற்கு ஆதரவாக யாழ்ப்பாணம், காரைநகர் பஸ் டிப்போ ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் இறங்குமாறு பணிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## கொடும்பாவி எரிப்பு

பருத்தித்துறை இ. போ. ச. ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நேற்று ஊழியர்கள் கொடும்பாவி ஒன்றை இழுத்துச்சென்றுவீதி வழியாக ஒப்பாரிவைத்து எரித்தனர்.

ஊழியர்கள் சுலோகங்களை தாங்கியவண்ணம்கோஷித்துக் கொண்டும், பறை அடித்துக் கொண்டும் இக்கொடும்பாவியைப் பிரதான வீதி வழியாக பஸ் நிலையம்வரை கொண்டு சென்று பின்னர் திக்கமுலை மைதானத்தில்வைத்து எரித்தனர். இதில் 200க்கும் அதிக மானவர்கள் கலந்துகொண்டனர். [த]

## ஆட்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பத்தைந்து ஆசனங்களைக் கைப்பற்றுமென்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாற்பது-ஐம்பது இடங்களைப் பெறுமென்றும் வடக்கு கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி பதினைந்து-இருபது இடங்களில் வெற்றியீட்டுமென்றும் ஆருடம் கூறியிருக்கிறது.

கடந்த இருபத்தி மூன்று ஆண்டுகளில் ஒரேயொரு தடவைதான் இந்தப் பத்திரிகையின் தேர்தல் முடிவுகள் பற்றிய ஆருடம் பிழைத்துப் போயிருக்கிறதென்றும் மற்றைய சமயங்களில் அவை உண்மையென நிரூபிக்கப்பட்டுள்ளதென்றும் அது வெளிப்படையாகக் கூறுகிறது.

# ''விஞ்ஞானம் ஆக்கத்திற்கு பயன்படவேண்டும்''

அரியாலை, சனி

''பூமி என்னும் கிரகத்தில் வாழும் மனிதன் சந்திரனுக்குச் சென்று ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், ஏனைய கிரகங்களையும், அவைகளின் செயல் முறைகளைப் பற்றியும் ஆராயும் அளவுக்கு அவன் விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேறி உள்ளான். கீழைத்தேய நாடுகளைவிட மேலைத்தேய நாடுகளில் வாழும் மக்கள் மிகவும் சந்தோஷமாக தமது சீவியத்தைக் கழிக்க - அதற்கு வேண்டிய ஆயத்தங்களை விஞ்ஞானத்தின் உதவியினுல் செய்துள்ளார்கள். ஆனுல் இவைகளினுல் அவர்கள் தேடுகிற சந்தோஷமும், இன்பமான வாழ்க்கையும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை''.

இவ்வாறு யாழ்ப்பாணம்பரி. யோவான் கல்லூரி பீற்றோ மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் வணக்கத்திற்குரிய பிதா யோண் - ஐசாயா பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''மனிதன் எவ்வளவு முன்னேற்றமான காரியங்களை மேற்கொண்டாலும், அவன் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழமுடியவில்லை. நாட்டுக்கு நாடு சண்டையும், தேசத்துக்குத் தேசம் பயங்கரமான யுத்தங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தனது விஞ்ஞான அறிவையும், ஆராய்ச்சியை மனித இனத்தின் அழிவுக்குப் பயன்படுத்துகிருன். ஆராய்ச்சிகளினுல் மனித இனம் தனக்கு அழிவைத் தேடும் கருவிகளைத் கருவிகளைச் செய்யாமல் ஆக்கத்துக்குரிய காரியங்களைச் செய்ய வேண்டும். அத்துடன் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனையும் - அவன் மூலம் எம்முள் செயல்படும் சக்தியையும் நாம் மதிக்கவேண்டும். இவைகளினுற்ருன் நாம் பூரண மனிதராகமுடியும்''.

—

## வெஸ்லி மறைவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பகுதிகளில் காரியாதிகாரியாகவும் பின்னர் யாழ்ப்பாணம் செயலகத்தில் பொது ஜனத்தொடர்பு அதிகாரியாகவும் கடமையாற்றி கடைசியாகக் குடியேற்ற வெளியேற்ற இலாகாவில் உயர் அதிகாரிகளில் ஒருவராகவும் பணியாற்றி ஓய்வுபெற்ற திரு. வெஸ்லி செல்வரத்தினம் மூன்று தினங்களுக்குமுன் மரணமானுர்.

அவரது ஈமக்கிரியைகள் நேற்று முன்தினம் கோம்பையன் மயானத்தில் நடைபெற்றபோது அரசாங்க அதிகாரிகளும் ஊழியர்களும் பல்வேறு துறையை சேர்ந்த நண்பர்கள் பலரும் கலந்துகொண்டனர்.


## மரண அறிவித்தல்

**ஸ்ரீஸ்கந்தராசா**

கைதடி நவில்ட் பாடசாலை மாணவர் ஸ்ரீஸ்கந்தராசா காலமாகிவிட்டார். இவர் காரைநகர் இ.போ.ச. சாலை அதிபர் திரு. க. தியாகராஜா, திருமதி தியாகராஜா ஆகியோரின் மகனும், லோகேஸ்வரராஜா, திருப்பதிராஜா, இரகுபதிராஜா, பதிவதனி ஆகியோரின் தமயனுமாவார். அன்னரது ஈமக்கிரியைகள் 17-7-77 காலை 9 மணிக்கு காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களையும் நண்பர்களையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். க. தியாகராசா. 6677



சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு






## நிகாடோ பப்படம்

தரத்தில் சிறந்தது. சுவையில் மணத்தில் நிகரற்றது
100 க்கு 70% விதம் திறமான உழுந்தில் தயாரிக்கப்பட்டது

## நிகாடோ பப்படம்

கல்யாண மண்டபங்கள், விருந்துகள். ஹோட்டல்கள் போஜனசாலைகள் முதலிய இடங்களில் பரிமாறும் அறுசுவைப் பதார்த்தங்களுக்கு சிகரம்போல் விளங்குவது

எங்கள் சுத்தமான, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

## நிகாடோ பப்படம்

இன்றே வாங்கி இன்புறுங்கள்.

மற்றும் எங்கள் போஷாக்குத் தயாரிப்புகள்

★ நியு நிகாடோ அம்மாமி பப்படம்
★ மங்கல பப்படம்
★ நிகாடோ மோர் மிளகாய்
★ நிகாடோ விஞகிரி
★ நிகாடோ தக்காளி சோஸ்
★ நிகாடோ மிளகாய் சோஸ்

முதலியன

நிகாடோ பப்படம் — றிஜிஸ்டர் இல; 37174
நிகாடோ அம்மாமி பப்படம் — றிஜிஸ்டர் இல; 37175

## நிகாடோ டிரேடிங் கம்பெனி

647, பண்டாரவத்தை
கடவத்தை

தொலைபேசி; 0783—285


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 17ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.